

# இலக்கியநயம்

## தரம் 11

### ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி


தமிழ்மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

ADB SEMP

Cover Design by: E.L.A.K Liyanage

# இலக்கிய நயம்

## தரம் - 11

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
2008

முதலாம் பதிப்பு:- 2007

© தேசிய கல்வி நிறுவகம்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

ISBN 978-955-654-180-9

இடைநிலைக் கல்வியை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டது.

வெளியீடு:

தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

அச்சப்பதிப்பு:

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பானலுவ, பாதுக்க.

# முகவுரை

புத்தாயிரமாண்டில் முதலாவது கலைத்திட்டச் சீர்திருத்தம் இன்றைய பாடசாலைக் கல்வி முறையிலுள்ள சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் நடைமுறைப் படுத்தப்படுகிறது. சிந்திக்கும் ஆற்றலும் சமூக ஆற்றல்களும் தனியாள் ஆற்றல்களும் நலிவடைவதால் இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டும், அதற்கான காரணங்களை ஆராய்ந்தும், அவ்வாறான நிலைமைகளை வெற்றி கொள்ளத் தேவையான பின்னணிகளை உருவாக்கியும் இக்கலைத் திட்டச் சீர்திருத்தம் திட்டமிடப் பட்டுள்ளது.

ஆசிய வலய நாடுகளுடன் ஒப்பிடும்போது இதற்கு முன்னர் எமது நாடு கல்வியில் முன்னணி வகித்தது. ஆனால் இன்று இவ் வலயத்தின் அநேக நாடுகள் இலங்கையை விட கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளன. தெரிந்த விடயங்களை மெருகூட்டுவதிலும், ஏற்கனவே முடிவு செய்தவற்றைக் கற்பதிலும் இருக்கும் விடயங்களை மீண்டும் அதே அடிப்படையில் கட்டியெழுப்புவதிலும் கல்வியியலாளர்கள் அண்மைக்காலமாக ஈடுபட்டமை இதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் இதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் சிலவாகும்.

இவ்விடயங்களை சீர்தூக்கிப் பார்த்து ஒரு தெளிவான கோட்பாட்டின் கீழ் புதிய கலைத் திட்டத்தை உருவாக்குவதில் தேசிய கல்வி நிறுவகம் முயற்சித்துள்ளது. தெரிந்தவற்றை மாற்றியமைத்தும், புதியவற்றைக் கண்டறிந்தும், எதிர்காலத்துக்குத் தேவையானவற்றை உருவாக்கியும் நாளைய வெற்றிக்காக தயார் நிலையில் இருக்கக்கூடிய மாணவர் குழுவை உருவாக்குவது இதன் அடிப்படை நோக்கமாகும். இன்றைய நிலையை வெற்றி கொள்ள ஆசிரியர் வகிபாகத்தில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் புதியதாகக் கூறவேண்டியதில்லை. இதுகாலவரை எமது வகுப்பறைகளில் நிலவி வந்த அறிவைக் கடத்தல் வகிபாகம், பரிமாற்ற வகிபாகம் என்பவற்றுக்குப் பதிலாக மாணவர் மைய, தேர்ச்சிமைய செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிலைமாற்று ஆசிரியர் வகிபாகத்தின் நிலைமைகளை நன்கு விளங்கி புதிய ஆசிரியர் வகிபாகத்தில் பயிற்சி பெறவேண்டிய நிலை இன்றைய ஆசிரியர் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

புதிய நிலைமைகளுக்கு இசைவாக்கம் அடைவதற்கான பல அறிவுறுத்தல்கள் அடங்கிய இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, விளைதிறன்மிக்க ஆசிரியரை உருவாக்க உதவும் என நாம் நம்புகிறோம். இந்த அறிவுறுத்தல்களைப் பரிசீலிப்பதன் மூலம் அன்றாடக் கற்பித்தல் செயற்பாடுகளைப் போன்றே மதிப்பீட்டுச் செயற்பாடுகளையும் இலகுவாக்கிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்களுக்கெனத் தரப்பட்டுள்ள தேடலுக்கான அறிவுறுத்தல்கள், தரஉள்ளீடுகள், ஆசிரியர் செயற்பாடுகளை இலகுவாக்கும் என்பது திண்ணம். அத்துடன் நேர ஒதுக்கீட்டின்போதும் வளப்பங்கீட்டின்போதும், உள்ளக மேற்பார்வையின்போதும் பயன்படக்கூடிய பெறுமதிமிக்க பல தகவல்களை அதிபர்களிடம் கொண்டு செல்வதற்கு இவ்வழிகாட்டி உதவும்.

பாடசாலை மட்டத்திலான மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக கல்வி நடவடிக்கை களில் ஈடுபடும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கு மட்டுமின்றி வெளியக மேற்பார்வையாளர் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடும் பல்வேறு தரத்திலான அதிகாரிகளுக்கும் பயன்படக்கூடிய வகையில் இவ்வழிகாட்டியைத் தயாரிப்பதில் நேரடியாகப் பங்களிப்புச் செய்த விஞ்ஞான தொழினுட்ப பீடத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி (திருமதி) ஐ. எல். கினிகே அவர்கள் உட்பட நிறுவக உத்தியோகத்தர்களுக்கும், பல்வேறு வழிகளில் சேவை செய்த வளவாளர்களுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

***பேராசிரியர் ஜே. டபிள்யூ. விக்கிரமசிங்ஹ***
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# முன்னுரை

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில் பாடசாலைக் கலைத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் அமைந்திருந்தமையால், அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரையொன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ளவேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப்பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்ற, அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயல்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாள்கின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விடே கவனம் செலுத்த வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி புதிய கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் நூலகத்தைப் பயன்படுத்துதல், நூல்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளல், இயலுமெனில் இணையதளம் மூலம் தகவல் திரட்டல் முதலான கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காணமுடியும். இதற்கு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடநூலை உசாத்துணை நூலாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வதே ஆசிரியர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்டுள்ள மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் கருதப்படுவர். அதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாணவர் எதிர்கொள்ளும் க்'டங்கள், இடையூறுகள் என்பவற்றை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின்போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை மேலும் விரிவுபடுத்துவதற்கான உபகரணமானது ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக, புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன்கூடிய மாணவர் பரம்பரையொன்று உருவாகுவதற்குப் பொருத்தமான வகையில் ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை என்பன புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

***விமல் சியம்பலாகொட,***
*மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,*
*தேசிய கல்வி நிறுவகம்.*

# அறிமுகம்

தேசிய கல்வி நிறுவகத்தினால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

- விரிவான பாடத்திட்டம்
- செயற்பாட்டுத் தொடரகம்
- கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

இப்பாடத்திட்டமானது, விடயத் தலைப்புகள், உபதலைப்புகள் என்பவற்றுக்கு மேலதிகமாக ஆசிரியர் பங்களிப்புக்குள் எடுக்கக்கூடிய பல்வேறு தீர்மானங்களை ஆசிரியர்களுக்கு விளக்கும் பயனுடைய ஒரு ஆவணமாகும்.

பாடச் சீர்திருத்தங்களுக்குரிய காரணிகளையும் பாட நோக்கங்களையும் அறிமுகஞ் செய்து ஆரம்பிக்கும் இவ்வேட்டில் பாடம் தொடர்பான தேர்ச்சிகளும், தேர்ச்சி அலகுகளும் உள்ளடக்கப் பட்டுள்ளன. மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி அலகுகள் தொடர்பான பாட உள்ளடக்கம் இங்கு குறிப்பிடப்பட்டிருத்தல் இவ்வேட்டின் சிறப்பியல்பாகும். இப்பாட உள்ளடக்கத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் நுட்பங்களைக் கருத்திற் கொண்டு அதற்கு எடுக்கும் நேரத்தைத் தீர்மானித்திருப்பது இப்பகுதியின் இன்னுமொரு சிறப்பியல்பாகும்.

இவ்விரிவான பாடத்திட்டம், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் தரத்தைப் பாதுகாக்கும் நோக்கிலே முன்வைக்கப்பட வேண்டிய தரஉள்ளீடுகள் தொடர்பாக தெளிவான விளக்க மொன்றை ஆசிரியர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு முனைந்துள்ளது. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு உதவும் பொருட்களை ஏற்கனவே கேட்டு உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது. பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன. **ஷஷபாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டமும்"** என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குக் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை ஒப்படைக்கும்போது, பாடவிதானச் செயற்பாடுகளைச் செயற்படுத்தும்போது, ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போது, உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு பாடசாலை முகாமைத்துவத்தில் ஈடுபடுபவர்களுக்கு இது தேவையான விளக்கங்களையளிக்கின்றது.

ஆசிரியர் பங்களிப்பிலே தெளிவான மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் விதமாக சீர்திருத்தப்பட்ட பாடத்திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றிக் கொள்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியருக்கு தேவையான உதவிகளை கூடியளவில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் பாடத்திட்டத்தை அமுலாக்குவதற்கு உரிய செயற்பாட்டுத் தொடரகத்தை அறிமுகஞ் செய்திருப்பது இதன் இன்னுமொரு சிறப்பம்சமாகும். இச்செயற்பாடுகளை அவ்வாறே ஆசிரியர்கள் செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. தனது ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனையாற்றல்களுக்கும் ஏற்ப செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. உதாரணமாக மூன்று குழுக்களை அமைக்க வேண்டும் என கூறியிருப்பினும் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதை மாற்றஞ் செய்து கொள்வதற்கு ஆசிரியருக்கு முடியும். சிறிய வகுப்புகளில் குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும்போது ஆசிரியர்கள் சாதுரியமாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

உரிய தேர்ச்சி மட்டம் நிறைவு பெறும் விதமாக செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. 40 நிமிட பாடவேளைக்கு அப்பால் செல்வதற்கு ஆசிரியருக்கு நேரிடலாம். ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தந்தச் செயற்பாடுகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோடு நேரசூசியில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனிப்பாடவேளை, இரு பாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளைப் பகுதிகளாகச் செய்து நிறைவு செய்து கொள்ளவேண்டியது ஆசிரியர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை மேலும் தொடர்ந்து அடுத்த நாளும் செய்யும்போது முதல் நாள் நிறைவு செய்தவற்றை மேலும் அறிமுகஞ் செய்து தொடர வேண்டும் என்பது உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. வகுப்பறையில் நிலவும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்களின்போது 40 நிமிட, 80 நிமிட நேரத்திற்கு உங்களால் கவனமாக திட்டமிடப்பட்ட திட்டங்களும் கூட நிறைவேற்றிக் கொள்வது அரிதானது என்பது இரகசியமல்ல.

யாதேனுமொரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என உங்களிடம் ஒருபோதும் எதிர்பார்க்கப்படமாட்டாது. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி சிறந்த கற்பித்தல் ஒன்றையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம்.

புதுவிடயங்களை அறிமுகப்படுத்தும்போது நீங்கள் செயலிழப்பதை தவிர்ப்பதற்காக உங்களுக்கு வேண்டிய கையேட்டை வழங்குவதை மட்டும் தேசிய கல்வி நிறுவகம் செய்துள்ளது. ஆசிரியர் பங்களிப்பிலே சிறந்ததொரு மாற்றத்தை நாடுபூராவும் உள்ள ஆசிரியர்களிடம் ஏற்படுத்துவதற்கு இவ்வேடு பெருந்துணை புரியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

அவ்வாறே இச்செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று புத்தாக்கங்களில் ஈடுபடும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பரிசளிப்பு முறை ஒன்றையும் அறிமுகஞ் செய்வதற்கு நாம் எதிர் பார்க்கின்றோம். அப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது உங்களால் திட்ட மிடப்படும் செயற்பாடுகளை உதவிப் பணிப்பாளர் நாயகம் (பாடத்திட்ட அபிவிருத்தி) தேசிய கல்வி நிறுவகம், மகரகம எனும் முகவரிக்கு அனுப்பி வைப்பதாகும். அவ்வப் பாடக் குழுக்களினூடாக அச்செயற்பாடுகள் பரிசீலனை செய்யப்பட்டு பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மூன்றாம் பகுதியில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உதவும் உபகரணத் தொகுதிகள் அடங்குகின்றன. செயற்பாட்டுத் தொகுதி ஒன்றை மையமாகக் கொண்டு வழங்கப்படும் இவ்வுபகரணங்கள் வகுப்பறைக்கு வெளியேயும் தொடர்ச்சியாக மாணவர்கள் கற்பதற்குத் துணைபுரியும். அவ்வுபகரணங்களைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலை பரிசீலனை செய்து உரிய மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்கள் பணியாகும். இம்மீளவலியுறுத்தல்கள் விருப்பமுள்ள கற்றல் அனுபவங்களை பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கு துணை புரியும். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. பொதுப் பரீட்சைகளில் கல்வி மட்டங்களுக்கு ஏற்ப முன்மாதிரி வினாக்களின் தன்மையை அறிமுகஞ் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் முயற்சிப்பது அதனாலாகும். இதன் பரீட்சை வினாக்களின் தன்மை தொடர்பாக எதிர்பார்க்கும் மாற்றத்தை விளங்கிக் கொள்ளும் நீங்கள் வழமையான முறையிலிருந்து விடுபட்டு மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

**கலாநிதி ஐ.எல். கினிகே**
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்

**ஆலோசனை :** **பேராசிரியர் ஜே. டபிள்யூ. விக்கிரமசிங்ஹ**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

**கலாநிதி விமல் சியம்பலாகொட**
உதவி பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல், சமூக, விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**மேற்பார்வை :** **செல்வி. பு. நாகலிங்கம்**
பணிப்பாளர்
தமிழ்த்துறை

**ஒருங்கிணைப்பு** **திருமதி.ஜி.சித்ரரஞ்சன்**
செயற்றிட்டத் தலைவர்

**பாடநிபுணத்துவ குழு :**

**பேராசிரியர் எஸ். தில்லைநாதன்** - தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்
**திரு. ரி. இராஜேந்திரம்** - திறந்த பல்கலைக்கழகம்
**கலாநிதி. எஸ். யோகராஜா** - கிழக்குப் பல்கலைக்கழகம்
**கலாநிதி. வி. மகேஸ்வரன்** - பேராதனைப் பல்கலைக்கழகம்
**திரு.கே. இரகுபரன்** - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
**திரு.எம்.ஏ.எம். ரமீஸ்** - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**எழுத்தாளர் குழு:**

உள்வாரி **:** **திருமதி. வி.காண்டீபன்** - செயற்றிட்ட அதிகாரி
**திருமதி. ஜி.சித்ரரஞ்சன்** - செயற்றிட்ட அதிகாரி

வெளிவாரி **:**

**செல்வி. எஸ். கணபதிப்பிள்ளை**
- முன்னாள் உதவி கல்விப் பணிப்பாளர், கண்டி.

**திருமதி. எஸ். நாகராஜா**
- ஆசிரியர் ஆலோசகர், புத்தளம்

**திருமதி.ஜி.யோகேஸ்வரன்**
- ஆசிரியர் ஆலோசகர், திருகோணமலை

**திருமதி எஸ். சத்தியதேவன்**
- ஆசிரியர், விவேகானந்தாக்கல்லூரி, கொழும்பு.

**செல்வி.வி.செல்வநாயகம்**
- ஆசிரியர், முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு.

**திருமதி பி. பாலச்சந்திரன்**
- ஆசிரியர், பாரதி தமிழ் வித்தியாலயம், பதுளை.

**திருமதி.ரி.காந்தரூபி**
- ஆசிரியர்,விஜயரட்ணம் இ.ம.வி, நீர்கொழும்பு

**திரு.கே.எம்.ஏ.சமது**
- ஆசிரியர்,மின்ஹாஜ் ம.வி, மாத்தளை

**திரு.எம்.இந்திரகுமார்**
- ஆசிரியர், சாரணியா த.ம.வி, பதுளை

**கணினி வடிவமைப்பு : செல்வி.சுபாஹினி ஸ்ரீதரன்**

# உள்ளடக்கம்


**பக்கம்**

முகவுரை iii
முன்னுரை iv
அறிமுகம் vi

## பகுதி I விரிவான பாடத்திட்டம்

1. அறிமுகம் xii
2. பாடத்தின் நோக்கங்கள் xiii
3. விரிவான பாடத்திட்டம் xiv
4. பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் xvii

## பகுதி II கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

1. அறிமுகம் xx
2. தர உள்ளீடுகள் xxiv
3. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் 1-60

## பகுதி III கணிப்பீடும் மதிப்பீடும்

1. அறிமுகம் 62-63
2. கணிப்பீட்டுக் கருவிகள் 65-70

## பகுதி I

# விரிவான பாடத்திட்டம்

## தரம் 11

# இலக்கிய நயம்

## தரம் 11

### 01. அறிமுகம்

10 ஆம் 11ஆம் தர மாணவர்கள் தமிழ் இலக்கியத்தைக் கற்பதற்கும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் விருப்பத்துக்குரிய ஒரு பாடமாகத் தெரிவு செய்வதற்கும் ஏற்றவகையில், கற்றல் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பொதுத் தகைமைகளுக்கும் அமைவாக இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தில் உள்ள செய்யுள், உரைநடைப் பகுதிகள் மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டும் நோக்கத்துடன் அவர்களின் வயது, விருப்பு, இரசனை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் முதலில் தற்காலக் கவிதைகளும் தொடர்ந்து பழந்தமிழ்ச் செய்யுள் இலக்கியங்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

தரமான இலக்கியங்களை மேலும் தேடிக் கற்கும் ஆர்வத்தை மாணவர்கள் மத்தியில் தூண்டவும், இரசனைத் திறனை வளர்க்கவும் இலக்கியங்களின் வாயிலாக விழுமியங்கள், படிப்பினைகளை அறிந்து பின்பற்றவும் இவ்விலக்கியத் தொகுப்பு வழியமைக்கும்.

உரைநடை, செய்யுள் இலக்கியங்களைக் கற்பதனூடாக மாணவர்கள் மொழித்திறன்களையும் மொழிவளத்தையும் விருத்தி செய்து கொள்வதுடன் பல்வேறுபட்ட ஆக்கங்களை விமர்சிக்கும் திறனையும் படைக்கும் திறனையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 02. பாட நோக்கங்கள்

- இலக்கியம் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தல்.
- இலக்கியத்தை நயந்து, அவற்றை வெளிப்படுத்தும் திறனை வளர்த்தல்.
- மொழித்திறனையும் மொழிவளத்தையும் விருத்தி செய்தல்.
- இலக்கியங்களை விமர்சிக்கும் ஆற்றலை வளர்த்தல்.
- தமிழிலக்கிய சிந்தனைப் பாரம்பரியத்தின் வெளிப்பாட்டு முறைமைகளையும் பரப்பையும் அறிமுகம் செய்தல்.

# இலக்கிய நயம் (விருப்புக்குரிய பாடம்)
## பாடத்திட்டம் - தரம் 11

| தேர்ச்சி | தரத்துக்குரிய தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| 1.இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார். | 1.1 பாடப்பகுதிகளை ஈடுபாட்டுடன் வாசிப்பார். | - உரைநடை<br>- செய்யுள் / கவிதை | 04 |
| | 1.2 படைப்புகள் மூலமாகத் தன்னையும் தனது குடும்பத்தையும் தான் சார்ந்த சமூகத்தையும் தான் வாழும் உலகத்தையும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார். | - தனிமனித இயல்புகள்<br>- குடும்ப உறவும் சிக்கலும்<br>- சமூக ஊடாட்டம்<br>- உலகப்போக்கு | 06 |
| | 1.3 படைப்புக்களை நயந்து அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார். | - அனுபவப் பகிர்வு<br>- இரசனை<br>- தனியாள், சமூக விமர்சனம்<br>- சமூக சீர்திருத்தம் | 05 |
| | 1.4 விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார். | - இலக்கியம் கூற முனையும் கருத்துக்கள்<br>- தனியாள், குடும்பம்,சமூகம்<br>- கையாளப்பட்ட உத்திகள்<br>- பாத்திரங்கள் பற்றிய கருத்துக்கள்<br>- மொழிப் பிரயோகம் / மொழிநடை | 05 |
| 2. இலக்கியங்களைக் கற்பதன் மூலம் விருத்தி செய்த மொழியாற்றலை வெளிப்படுத்துவார். | 2.1 பாடப்பகுதிகளினூடாகப் பெற்ற மொழியாற்றலைப் பிரயோகிப்பார். | - இலக்கியங்கள் | 05 |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சி | தரத்துக்குரிய தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|---|
| | 2.2 படைப்புகளின் மொழியாட்சி பற்றிக் கருத்துக்களை முன்வைப்பார். | - செய்யுள் நடை / வசன நடை<br>- இலக்கிய வழக்கு, பேச்சுவழக்கு<br>- பேச்சோசை | |
| | 2.3 பாடப்பரப்பைக் கிரகித்து விடையளிப்பார் | - பிரதான கருத்து<br>- துணைக்கருத்துக்கள்<br>- சொல்லாட்சிகள்<br>- பாத்திர இயல்புகள்<br>- உத்திகள்<br>- அரும்பதங்கள்<br>- விழுமியக் கருத்துக்கள் / படிப்பினைகள் | 10 |
| 3. பல்வேறுபட்ட படைப்புகளை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். | 3.1 பல்வேறு வகைப்பட்ட படைப்புகளை ஆர்வத்துடன் வாசிப்பார். | - உரைநடை<br>- கவிதை<br>- செய்யுள் | 04 |
| | 3.2 படைப்புகள் குறித்து சிந்தித்து, கலந்துரையாடி, தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார். | - உரைநடை<br>- கவிதை<br>- செய்யுள் | 06 |
| 4. இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார் | 4.1 இலக்கியங் களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார். | - அறக்கருத்துக்கள்<br>- படிப்பினைகள், மானுட விழுமியங்கள்<br>- நகைச்சுவை உணர்வு<br>- வாழ்வியல் அம்சங்கள் | 05 |
| | 4.2 இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுமாற்றை விளக்குவார். | - மானுடநேயம்<br>- நீதி உணர்வு<br>- புரிந்துணர்வு<br>- பொறுப்புணர்வு | 05 |

## பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கோளுரை | 1 |
| 2. | நோக்கியும் நோக்காதும் போல் | 4 |
| 3. | நீருழவன் | 6 |
| 4. | புல் | 9 |
| 5. | சிங்களத்து மருத்துவச்சி | 12 |
| 6. | காலைப்பொழுது | 16 |
| 7. | நாட்டார் பாடல் | 19 |
| 8. | இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும் | 22 |
| 9. | பறாளை விநாயகர் பள்ளு (இருபாடல்கள்) | 27 |
| 10. | ஷதேருளைப் புரவி' செய்யுள் பகுதி (தனிப்பாடற்றிரட்டு) | 30 |
| 11. | பைத்தியக்காரி | 33 |
| 12. | ஷவானுறு மதியை' (நந்திக்கலம்பகம்) | 37 |
| 13. | கையடைப்படலம் பகுதி II | 39 |
| 14. | நாவலர் இருவர் | 44 |
| 15. | ஷஆற்றுநர்க்கு...' மணிமேகலைச் செய்யுள் | 47 |
| 16. | திருக்குறள்-ஒழுக்கமுடைமை | 51 |
| 17. | மொழியின் அதியற்புத இயல்பு | 55 |
| 18. | ஷகளம்புகலோம்புமின்...' (புறநானூற்றுச் செய்யுள்) | 58 |


Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும்

பாடசாலை முகாமைத்துவக் குழுவினர், பாடத்திட்டத்திலுள்ள நோக்கங்கள், தேர்ச்சிகள் என்பவற்றை வாசித்தறிதல் மிகவும் முக்கியமான ஒரு பணியாகும். தமிழ் இலக்கியத்தைக் கற்றல் - கற்பித்தல் தொடர்பான பாடசாலைக் கொள்கையை உருவாக்கவும் அக்கொள்கையை நிறைவேற்றவும் நோக்கங்களும், தேர்ச்சிகளும் உதவியாக அமையக்கூடியன.

பாடசாலையில் பாடத்திட்டத்தை அமுலாக்கும்போது மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை மனதிற்கொண்டு மாணவர்களின் தேவையை ஈடுசெய்யவும் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்க்கவும் பொருத்தமான முறையில் கொள்கை உருவாக்கமும் நிகழ்ச்சித் திட்டமும் அமைய வேண்டும்.

அவற்றிற்கான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

## அ. கொள்கையை உருவாக்குதல்

1. பாடசாலையிலுள்ள தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாவரும் மொழியாசிரியர் என்ற நோக்கில் செயற்பட வழிசெய்தல்.

2. தமிழ் கற்றல் - கற்பித்தல் தொடர்பான கொள்கையை அமுலாக்குவதற்கு நடவடிக்கைக் குழுவொன்றை அமைத்தல்.

3. சமூக, கலாசார மரபுகளையும் விழுமியங்களையும் அறிந்து தொடர்ந்து பேணுவதற்கு வழிசெய்தல்.

4. பாடசாலையைச் சூழவுள்ள பிரதேசத்திலுள்ள தமிழ்மொழி சார் வளங்களை மாணவர்களின் மொழி விருத்திக்காக உச்ச அளவில் பயன்படுத்துதல்.

## ஆ. அமுலாக்குவதற்கான வேலைத்திட்டம்

01. இலக்கிய மன்றங்கள் போன்ற மாணவர் மன்றங்களை வகுப்புரீதியாக அமைத்து மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வளர்க்க உதவுதல்.

02. பாடசாலை மட்டத்தில் விவாதம், கவியரங்கு, பட்டிமன்றம், இலக்கியப்போட்டி, பொது அறிவுப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல்.

03. பெரியார்களை அழைத்து இலக்கியச் சொற்பொழிவுகளை நடத்துதல்.

04. நூல் நிலையங்களில் மொழி இலக்கியம் சார்ந்த நூல்களை களஞ்சியப்படுத்தல். வாசித்த இலக்கிய நூல்களில் இருந்து பெற்ற விடயங்களை கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்தல்.

05. ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலே சிறுகதை, நாடகம், கவிதை போன்றவற்றை எழுதுவதற்குப் போட்டிகளை நடத்துதல்ளூ சுவரொட்டிகள், விளம்பரங்கள் என்பன எழுதுவதற்கான போட்டிகளை நடத்துதல்.

06. பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய கூத்துகள், நாடகங்கள் போன்ற சிறப்பான கலையம்சங்களையறிந்து அவற்றைப் பாடசாலை மன்றங்களின் ஊடாக மேடையேற்றுவதன் மூலம் பிரதேசக் கலைப்பாரம்பரியங்களை வளர்க்க வழிசெய்தல்.

07. கலைவிழாக்களை ஒழுங்குசெய்தல், அவற்றில் பங்குபற்றுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# பகுதி - II

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

# அறிமுகம்

இப்பாடத் திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த ஷஊடு கடத்தும் வகிபாகம்' (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட ஷபரிமாற்றல் வகிபாகம்' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படு கின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் வகிபாகத்தில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் மாறியுள்ளார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபாகத்தின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப்பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்ப வற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு ஷஉருமாற்றப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும் படி ஷஈடுபடுத்தும் படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபாகத்தின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்வார். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல், படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல், பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations), கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இங்கு அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டு பிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டேயாகும்.

பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதைத் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர், குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக்களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Elaboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப் படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு பரிமாற்றல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற் றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், பரிமாறல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

## தர உள்ளீடுகள்

- மேலதிக வாசிப்புப் பகுதிகள் (சிறுகதை/கவிதை/செய்யுள்/கட்டுரை...)
- சஞ்சிகைகள்
- பத்திரிகைகள்
- அகராதி
- கலைக்களஞ்சியம்
- வானொலி
- ஒலிப்பதிவுக்கருவி, ஒலிப்பதிவு நாடா
- தொலைக்காட்சி
- கணனி
- இணையம்
- இறுவட்டு
- மேற்றலை எறியி (OHP)
- செயற்பாடுகளுக்குத் தேவைப்படுகின்ற ஏனைய பொருட்கள்

  (பேனை, பென்சில்,கடதாசி, கத்தரிக்கோல்...)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

**தேர்ச்சி: 3.0** **பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2:** படைப்புக்கள் குறித்து சிந்தித்து, கலந்துரையாடி தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

**செயற்பாடு:** "கோளுரை" என்ற கவிதையை வாசித்துக் கிரகிப்பதோடு ஆக்கங்களையும் படைப்போம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு :**

- பாடநூல் (கவிதை - கோளுரை)
- பாரதியார் பாடல் - பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் I - பின்னிணைப்பு - 2
- எழுது கருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 3.2.1**

- பின்னிணைப்பு I இல் உள்ள கவிதையை வகுப்பறையில் காட்சிப்படுத்தி கவிதையின், கருத்துப் புலப்பட மாணவரை வாசிக்கவிடல். ஆசிரியரும் வாசித்துக் காட்டுதல்.
- பின்வரும் வினாக்களை வினவி, மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

1. மக்கள் அஞ்சுகின்ற விடயங்கள் யாவையெனக் குறிப்பிடுகின்றார்?
2. அவ்வாறு அஞ்சுபவர்களை பாரதியார் எப்படிக் குறிப்பிடுகின்றார்?
3. இக்கவிதையூடாக பாரதியார் புலப்படுத்த விரும்புபவை யாவை?

- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

| |
|---|
| • கவிதையின் கரு |
| • வெளிப்பாட்டுத் திறன் - உத்திகள் |
| • மொழிநடை |
| • சமூக நோக்கு |
| • படிப்பினைகள் |

(15 நிமி)

**படி 3.2.2**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- "கோளுரை" கவிதையை மாணவர்களுக்கு வழங்கி மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் I ஐ வழங்கி விடைகளை எழுத அறிவுறுத்துங்கள்.

(40 நிமி)

**படி 3.2.3**

- மாணவர் தாம் குழுநிலையில் பூர்த்திசெய்த செயற்பாட்டுப் பத்திரத்தினை சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.
- ஏனையோர் அதனை அவதானித்து தம் கருத்துக்களைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- மாணவர் முன்வைத்த விடயப் பொருத்தப்பாட்டினை இனங்கண்டு கீழ்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

> - 'விதியைவிட, விடாமுயற்சியும் கடின உழைப்புமே வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படையானவை.' என்ற கருத்தினைக் கவிஞர் புலப்படுத்துகின்றார்.
>
> - முயற்சியால் முனைந்தவன் சந்திரனில் காலடி வைத்தான். உழைப்பை முதன்மையாகக் கொண்டவன் விதியை மாற்றினான்.
>   - விதியை நம்பியவன் வீழ்ச்சியுற்றான்.
>   - தலையெழுத்தை நம்பியவன் நிலையற்று வீழ்ந்தான்.
>   - கைகளில் பொய்யான ரேகையின் வழி நம்பிக்கை கொண்டவன் பொய்வழியே சென்றான்.
>
> - கருத்து ரீதியாகவும், உதாரணங்கள் மூலமாகவும் தமது நோக்கத்தை வலியுறுத்தல். பண்டைய இலக்கியங்களின் கதைவழி தமது கருத்தை வலியுறுத்துதல்.
>   - நாள் பார்த்து தானே இராமனது முடிசூட்டு நாள் குறிக்கப்பட்டது. (ஆனால் நடந்தது என்ன?) இராமன் காட்டுக்குப் போனான்.
>   - காலநேரம் பார்த்துதான் கண்ணகி திருமணம் நடந்தது. ஆயினும் அந்த வாழ்க்கையில் அவள் கண்டது அவலம் தானே.
>
> - இராமபிரானின் கதையை உதாரணமாகக் காட்டி, சிந்திக்கத் தூண்டுவதனூடாக கவிஞர் தமது கருத்தைப் புலப்படுத்துகின்றார்.
>
> - 'எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகின்றது என்பதை முன்கூட்டியே அறிவது வாழ்க்கையைச் சுவையற்றதாக்கி விடும்' என்பதையே இங்கு கவிஞர் புலப்படுத்த விரும்புகிறார்.
>
> கோளுரை : கோள் என்பது கிரகங்களைக் குறிக்கும். கோள்களை அடிப்படையாகக் கொண்டது சோதிடம். நாள் பார்த்தல் முதலான செயற்பாடுகள் சோதிடம் பார்ப்பதன் மூலம் நடைபெறுகின்றன. எனவே கோள்கள் மனித நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் செல்வாக்கும் அதை நம்பியோரின்வீழ்ச்சியும், அதனை நம்பாது முயன்றோர் அடையும் உயர்ச்சியும் கூறப்படுவதால் - "கோளுரை" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. (கோளினது உரை)
>
> - கவிஞர் அப்துல் ரகுமான் பற்றிய குறிப்புகள்

(65 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. கவிதைகளை கருத்தூன்றி வாசித்து பொருளை சுருக்கமாக எழுதுவார்.
2. கவிதையில் இடம் பெற்றுள்ள எடுத்துக்காட்டுக்களை விளக்கிக் கூறுவார்.
3. கவிதையில் இடம்பெற்றுள்ள அணிகளை விளக்குவார்.
4. கவிதையில் பொதிந்துள்ள படிப்பினைகள், விழுமியங்களை குறிப்பிடுவார்.
5. சிறந்த கவிதைகளை எழுதுவார்.

பின்னிணைப்பு - I

நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்க ளென்பார் - இந்த
மரத்திலென் பார்ளூ அந்தக் குளத்திலென்பார்,
துஞ்சுது முகட்டி லென்பார் - மிகத்
துயர்ப்படு வார்எண்ணிப் பயப்படுவார்.

- பாரதியார் -

---

பின்னிணைப்பு - II

**செயற்பாட்டுப் பத்திரம் - I**

குழுரீதியாகக் கலந்துரையாடிப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. இக்கவிதை ஊடாக கவிஞர் புலப்படுத்த விரும்பும் பிரதான கருத்து யாது?

2. முயற்சி உடையோருக்குக் கிடைத்த வெற்றிகளையும் விதியை நம்பியோருக்குக் கிடைத்த தோல்விகளையும் குறிப்பிடுக.

3. தாம் எடுத்துக்கொண்ட கருத்தைப் புலப்படுத்த கவிஞர் கையாண்டுள்ள உத்திகள் யாவை?

4. “கோளும் நாளும்
குறித்தது ராமன்
கொற்றவன் ஆவதற்கு - அந்த
நாளில் என்ன
நடந்தது? பாவம்
நடந்தான் காட்டுக்கு”
என்ற அடிகள் மூலம் கவிஞர் தமது கருத்தை புலப்படுத்தும் விதத்தை விளக்குக.

5. கதை
முழுவதும் உனக்கு
முன்னால் தெரிந்தால்
மூச்சில் சுவை ஏது
இவ்வடிகள் ஊடாக கவிஞர் புலப்படுத்த விரும்புவது யாது?

6. “கோளுரை” என்ற தலைப்பின் பொருத்தப்பாடு பற்றிக் கருத்துத் தெரிவிக்குக.

**மேலதிகச் செயற்பாடு**

சமூகத்திற்குப் படிப்பினையூட்டும் வகையில் நீர் விரும்பிய தலைப்பில் 8 - 12 வரிகளில் கவிதையொன்று எழுதுக.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3**: படைப்புக்களை நயந்து அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**செயற்பாடு:** "நோக்கியும் நோக்காதும் போல்" என்ற கட்டுரையை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பாடநூல்
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - I
- எழுது கருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.3.1**

கீழ்வரும் திருக்குறளை கரும்பலகையில் காட்சிப்படுத்தி அதனை மாணவர் வாசிக்க வழிப்படுத்துங்கள்.

> "கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனும் இல"

- இத்திருக்குறளில் கவிஞர் எதனை வெளிப்படுத்த முனைகிறார் என வினவி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். மனமொத்த காதலை வெளிப்படுத்த புலவர் கையாண்ட உத்தியை விபரிக்குக. இலக்கியங்களை படிக்கும்போது எவ்வெவ் விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டும் என்று வினவி,

- கீழ்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

> - அனுபவப் பகிர்வு
> - இரசனை
> - தனியாள், சமூக விமர்சனம்
> - விழுமியம்

(15 நிமி)

**படி 1.3.2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் "நோக்கியும் நோக்காதும் போல்" என்ற கட்டுரையை மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்கி விடை எழுத வழிப்படுத்துங்கள்.

(65 நிமி)

**படி 1.3.3**

- மாணவர்கள் தாங்கள் எழுதிய செயற்பாட்டுப் பத்திரத்தினை சமர்ப்பிக்க வழிசெய்யுங்கள்.
- மாணவர்கள், செயற்பாட்டுப் பத்திரம் தொடர்பாக கருத்துரைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த விடயப் பொருத்தப்பாட்டினை அறிந்து கீழ்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**சீறாப்புராணத்தின் சிறப்பு**

- நபியவர்களின் வரலாறு கூறும் இலக்கியம்.
- பெருங்காப்பியத்துக்குரிய பண்புகளையுடையது.

**உமறுப் புலவரின் கவித்துவம்**

- பழந்தமிழ்ச் செய்யுட்களில் அவருக்கிருந்த ஈடுபாடு.
- தமிழ் மரபையும் அதேவேளை இஸ்லாத்தின் துய்யமரபினையும் செம்மையாகப் பேணியமை.
- பாடல்கள் மூலம் நபி, கதீஜா ஆகியோரை நமது மனக்கண் முன் கொண்டுவருதல்.
- நபி, கதீஜா காதலுணர்வினைக் காட்டிய பாங்கு.
- கம்பராமாயணத்திலும் சீறாப்புராணத்திலும் காதலுணர்வு வெளிப்படுத்தப்படும் விதம்.
  கம்பராமாயணத்தில்: "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."
  சீறாப்புராணத்தில்: "காரிகை வடிவைக் கண்ணால் நோக்கியும் நோக்காதும் போல."

- சீறாப்புராணத்தையும் கம்பராமாயணத்தையும் ஒப்பிட்டுக் காட்டி, கட்டுரையை சுவாரசியமாக வளர்த்துச் சொல்லுதல். - (உதாரணங்களுடன் விளக்குதல்.)

(40 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கட்டுரைகளை வாசித்து அவற்றின் பிரதான கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
- கட்டுரையில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களை விளக்கிக் கூறுவார்.
- கட்டுரையில் தான் நயந்த பகுதியினையும், அதற்கான காரணத்தையும் விளக்குவார்.
- கதாபாத்திரங்களை ஒப்பிட்டு விமர்சிப்பார்.

பின்னிணைப்பு - I

**செயற்பாட்டுப் பத்திரம் - I**

"நோக்கியும் நோக்காதும் போல்" என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு கீழ்வருவனவற்றை விளக்குக.

1. சீறாப்புராணத்தின் சிறப்பு.
2. உமறுப்புலவரின் கவித்துவம்.
3. கம்பராமாயணத்திலும் சீறாப்புராணத்திலும் காதலுணர்வு வெளிப்படுத்தப்படும் விதம்.
4. கட்டுரையாசிரியர் கட்டுரையை சுவாரசியமாக வளர்த்துச் செல்கின்ற விதம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2:** படைப்புகள் மூலமாகத் தன்னையும் தனது குடும்பத்தையும் தான்சார்ந்த சமூகத்தையும் தான் வாழும் உலகத்தையும் விளங்கி அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு:** மகாகவியின் "நீருழவன்" என்ற கவிதையை வாசித்து, கருத்துக்களை முன்வைப்போம்.

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு :**
- நாட்டார் பாடல் - பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் - I, II - பின்னிணைப்பு-2
- எழுதுதாள்கள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.2.1**

- பின்னிணைப்பு I ஐ வகுப்பறையில் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- இப்பாடல் எத்தொழிலைச் செய்வோர் தொடர்பானது?
- இப்பாடலில் தொழிலாளர் படும் துன்பங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன?
- தொழிலாளர் சுரண்டப் படுகின்ற தன்மை எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
- இப்பாடலில் இழையோடுகின்ற உணர்வுகள் எவை?
- இவ்வினாக்களுக்கான விடைகளைப் பெறுவதுடன் கவிதையொன்றினை வாசிக்கும்போது எவ்விடயங்களைக் கவனிக்க வேண்டும் என்று வினவி, கீழ்வரும் விடயங்கள் பற்றியும் தெளிவுபடுத்துங்கள்.

> - கவிதையின் மையக்கரு
> - மொழிநடை
> - கையாளப்பட்ட உத்திகள்
> - கவிதையின் நயம்
> - கவிதையில் வெளிப்படும் விழுமியம்

(15 நிமி)

**படி 1.2.2**

- மாணவர்களை ஐந்துக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- "நீருழவன்" கவிதையை வழங்குங்கள்.
- தனித்தனியே மாணவர் கவிதையை மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் I இனை வழங்கி, குழுநிலையில் கலந்துரையாடி, குழுக்களுக்கு A,B,C,D,E, எனப் பெயரிட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு விடயத்தை வழங்கி, செயற்பட வழிப்படுத்துங்கள்.

(45 நிமி)

**படி 1.2.3**

- ஒவ்வொரு குழுவும், பூர்த்தியாக்கப்பட்ட செயற்பாட்டுப்பத்திரத்தினை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
- முன்வைக்கப்படும் விடயங்களை ஏனைய மாணவர்கள் அவதானித்து, கருத்துக்கூற இடமளியுங்கள்.

- பின்வரும் விடயங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- கடுமையான உழைப்பில் ஈடுபட்ட போதிலும் மீனவனை வாட்டிய துன்பம்:
  - ஓட்டைக் குடிசை.
  - வாரிக்கொள்பவர் பிறர்.
  - சந்தையில் விற்றுப் பயனடைபவன் பிறன்.
  - (பொல்லாக்) கடலால் வருந்துதல்.

**காரணம்:** வாரிக்கொள்பவரும் சந்தையில் விற்றுப் பயனடைபவரும் பிறராக இருத்தலே துன்பத்திற்குக் காரணமாகும்.

- மீனவனின் எதிர்ப்பார்ப்புக்களாக இப்பாடலில் குறிப்பிடப்படுபவை
  - மனைவி பட்டுப்புடவை உடுத்து மகிழ்ச்சியாக இருத்தல்.
  - மகள் அழகாக உடுத்து மிடுக்குடன் பாடசாலைக்குத் தமிழ் கற்கச் செல்லல்.

நீருழவன்:
- நிலத்தை உழுபவன் உழவன். இவனோ நீரை உழுபவன்.
- உழவன் ஏரால் உழுதல். இவனோ படகால் உழுதல்.
- ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நீரை உழுதல் கடின உழைப்பு.

**குழு A: மீனவனின் உழைப்பு / முயற்சி**
- நடுக்கடலில் போட்ட வலையை வலித்திழுத்தல்.
- அலையோடு முட்டி மோதுதல்.
- வெட்டவெளி நீரை உழுதல்.

**குழு B: துன்பியல் உணர்வு**
- ஓட்டைக் குடிசை ஒழுகுதல்.
- நடுக்கடலில் போட்ட வலையை வலித்திழுத்தல், பாசி வரல்.
- அலையோடு முட்டி மோதுதல்.
- வயிற்றை அகழும் பசி.
- கடனால் வருந்துதல்.
- வாரிக்கொள்பவர் பிறர், விற்றுப் பயனடைபவன் பிறன்.

**குழு C: சமூகச் சுரண்டல்**
- பிறன் வாரி அள்ளிக் கொள்கிறான்.
- சந்தையில் விற்றுப் பயனடைவோன் வேற்றான்.

**குழு D:**
i. மிகவும் க஼டப்பட்டு பாரை, சுறா என்பவற்றைப் பிடித்தாலும் அவை அவனுக்குப் பயன்படுவதில்லை. பிறருக்கே பயன்படுகிறது.
ii. மனிதன் முயற்சி எடுத்தால் யாவும் வெற்றியே.
iii. கண்ணுக்கு முன்னாலேயே தான் பிடித்த மீன்களைப் “பறிகொடுத்துவிட்டு” வேதனையோடு வீடு செல்லல்.
iv. கடின உழைப்புத்தரும் வெற்றியினால் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு எதுவும் ஒப்பில்லை.

**குழு E:** கவிதையை ஓசையுடன் உணர்ச்சிபூர்வமாக வாசிக்கிறார்களா என்பதை அவதானியுங்கள்.

(20 நிமி)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. கவிதைகளை வாசித்து அவற்றின் பொது அம்சங்கள் பற்றி அறிந்து கூறுவார்.
2. கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் அம்சங்களை எடுத்துக் கூறுவார்.
3. கவிதையில் காணப்படும் விழுமியக் கருத்துக்களை எழுதுவார்.
4. தரமான கவிதைகளை அறிந்து அவை பற்றி விமர்சனம் செய்வார்.

பின்னிணைப்பு -1

---

றப்பர் மரமானேன்
நாலுபக்கம் வாதானேன்
எரிக்க விறகுமானேன்
இங்கிலிசுக் காரனுக்கு
ஏறிப்போகக் காருமானேன்
ஆத்தோரம் கொந்தரப்பு
அதுநெடுக வல்லாரை
வல்லாரை வெட்டியல்லோ என்
வல்லமை குறைஞ்சதையா

பின்னிணைப்பு - 2

---

## செயற்பாட்டுப் பத்திரம் - I

குழுவாகக் கலந்துரையாடி, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கடுமையான உழைப்பில் ஈடுபட்டபோதிலும் மீனவனை வாட்டிய துன்பம் எது? அத்துன்பத்திற்கான காரணம் யாது?
2. மீனவனின் எதிர்ப்பார்ப்புகளாக இப்பாடலில் குறிப்பிடப்படுபவை எவை?
3. 'நீருழவன்' என்ற சொற்பிரயோகத்தின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

## செயற்பாட்டுப் பத்திரம் - II

குழு: **A** மீனவனின் உழைப்பு / முயற்சி பற்றி இக்கவிதையில் கூறப்பட்டிருப்பதை விளக்குக.

குழு: **B** இக்கவிதையில் இழையோடியுள்ள துன்பியல் உணர்வுகளை சுட்டிக்காட்டி எழுதுக.

குழு: **C** நடைமுறை உலகில் உழைப்புச் சுரண்டல் தொடர்பான கருத்து இப்பாடலில் வெளிப்பட்டு நிற்குமாற்றை விளக்குக.

குழு: **D** கீழே தரப்பட்டுள்ள பாடலடிகளின் சிறப்புகளை எழுதுக.

- i. பாரை, சுறா என்று பார்த்திருக்கும் ஊரை மகிழ்விக்க வல்ல மனிதன், வயிற்றை அகழும் பசியால் அயரான்
- ii. மானிடன் தொட்டால் துலங்கா தொழிலுண்டோ
- iii. தன் செல்வம்தனைக் களவு செல்லவிட்டு மெல்ல நடக்கிறான் வீட்டுக்கு. பேருழைப்பு ஈனும் மகிழ்ச்சிக் கெதிரேது.

குழு: **E** கவிதையை ஓசையுடன் உணர்ச்சி பூர்வமாக வாசியுங்கள்.
(கவிதை வாசிப்பானது, ஏனைய விடயங்களின் வாசிப்பிலிருந்து எவ்வகையில் வேறுபட்டது என்பதை அறிந்து வாசிக்கப் பயிற்றுவித்தல்)
(உதாரணம்: ஓசை, உணர்ச்சி, நிறுத்தக் குறியீடுகள்)

**தேர்ச்சி: 3.0** **இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2:** படைப்புகள் குறித்து சிந்தித்து, கலந்துரையாடி, தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

**செயற்பாடு:** கவிமணியின் "புல்" என்னும் கவிதையை நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பாடநூல்
- செயற்பாட்டுப் பத்திரங்கள் - I, II
  பின்னிணைப்பு - 1
- எழுதுகருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 3.2.1**

கீழ்வரும் பாடலை வகுப்பறையில் காட்சிப்படுத்தி, அதனை வாசிக்க வழிப்படுத்துங்கள்.

உண்ணக் கனி - ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து - உணர்வுக்கு விருந்து
அடையக் குடில் - அடைக்கக் கதவு
அழகு வேலி - ஆடத்தூளி
தடவத் தைலம் - தாளிக்க எண்ணெய்
எழுதக் காகிதம் - எரிக்க விறகு

மரந்தான் - மரந்தான்
எல்லாம் மரந்தான்
மறந்தான் - மறந்தான்
மனிதன் மறந்தான்

இக்கவிதை சொல்லும் செய்தி என்ன? இதுபோன்ற கவிதைகளை வாசித்துள்ளீர்களா? கவிதைகளை வாசிக்கும்போது எவ்விடயங்களை அவதானிக்க வேண்டும்? என வினவி மாணவரோடு கலந்துரையாடுவதுடன் பின்வரும் விடயங்களையும் தெளிவுபடுத்துங்கள்.

- விளக்கம்
- கவிதையின் பொருள்
- கையாளப்பட்ட மொழிப் பிரயோகம்
- வெளிப்பாட்டுத் திறன்
- விழுமியங்கள்

(10 நிமி)

**படி 3.2.2**

- "புல்" என்ற கவிதையை மாணவர்கள் தனித்தனியாக வாசிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொருவருக்கும் செயற்பாட்டுப் பத்திரம் I ஐ வழங்கி வாசிக்கச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திற்கு மாணவர்கள் விடை எழுத வழிப்படுத்துங்கள்.

(40 நிமி)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 3.2.3

- மாணவர்கள் செயற்பாட்டுப் பத்திரத்திற்கு எழுதிய விடைகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுவிலுள்ள ஏனைய மாணவர்கள் அவற்றை அவதானித்து கருத்துரைக்க வாய்ப்பளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த விடயப் பொருத்தப்பாட்டை இனங்கண்டு கீழ்வரும் விடயங்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

- கவிதையின் மையக்கருத்து

  சவால்களுக்கு மத்தியில் தனது
  இலட்சியத்தை நோக்கி
  முன்னேறுதல் / வெற்றியடைதல்.

- இக்கவிதை தரும் படிப்பினை

  துன்பங்களைக் கண்டு துவண்டு விடக்கூடாது.

- இக்கவிதை கூறும் விழுமியங்கள்
- கையாளப்பட்ட உத்தி
- உதாரணம் காட்டி விளக்குதல் (திருக்குறள்)
- எளியநடை
- பேச்சோசை
- தன்னுயிர் போல மன்னுயிரையும் நேசிக்க வேண்டும்.
- உறவினரல்லாதோரும் உதவுவர். (பூமி - வானம்)
- பொறாமை கூடாது.
- பொறுமை (பொறுத்தார் பூமியாள்வார்)
- சிறியோரிடமும் சீரிய குணங்களுள்ளன.
  உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குதல் வேண்டும்.

(25 நிமி)

படி 3.2.4

- மாணவர்களை குழுக்களாக்குங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரம் 2 ஐ ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- குழுவாகக் கலந்துரையாடியபின், தனிநிலையில் தமது ஆக்கங்களைப் படைக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

(25 நிமி)

படி 3.2.5

- எழுமாற்றாக ஐந்து மாணவர்களை அழைத்து, எழுதிய கவிதைகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனையவர் அவற்றை அவதானித்து தமது கருத்துக்களை கூற இடமளியுங்கள்.
- மாணவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி பின்வருவன பற்றியும் கலந்துரையாடுங்கள்.

- விடயம் அறிமுகப்படுத்தப்பட்ட விதம்
- விடயத்தை வளர்த்துச் செல்லும் விதம்
- கையாளப்பட்ட உத்திகள்
- மொழிநடை
- விழுமியக் கருத்துக்கள்
- படிப்பினைகள்

(20 நிமி)

## கணிப்பீடும் மதிப்பீடும்

1. கவிதையின் மையக்கருத்தை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
2. பாடலின் பொருளைத் தொகுத்து, சொந்த மொழிநடையில் எழுதுவார்.
3. கவிதையில் பொதிந்துள்ள விழுமியங்களைக் கூறுவார்.
4. கவிஞர் தமது எண்ணக் கருத்துக்களை வெளிப்படுத்தக் கையாண்ட உத்திகளைக் கூறுவார்.
5. கவிதையூடாகப் படிப்பினைகளையும் சமூக விழுமியங்களையும் அறிந்து எழுதுவார்.
6. பல்வேறு வகைப்பட்ட ஆக்கங்களை வாசித்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சுய ஆக்கங்களைப் படைப்பார்.

பின்னிணைப்பு - 1

### செயற்பாட்டுப் பத்திரம் - I

1. 'புல்' எனும் இக்கவிதையின் மையக்கருத்து யாது?
2. இக்கவிதையிலிருந்து நீர் கற்றுக்கொள்ளும் படிப்பினை, விழுமியங்களைத் தருக?
3. தமது கருத்தை வெளிப்படுத்த கவிமணி கையாண்டுள்ள உத்திகள் எவை?
4. புல்' தானடைந்த துன்பங்களை எவ்வாறு வெளிப்படுத்துகின்றது?
5. இக்கவிதையை வாசித்ததன் பின் உமது மனதில் எழுகின்ற எண்ணங்களை விபரிக்குக.

### செயற்பாட்டுப் பத்திரம் - II

இவ்வாறான எண்ணக்கருக்களைக் கொண்ட பல்வேறு ஆக்கங்களை எழுதுங்கள்.
உதாரணம்: பனைமரம், ஆறு.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி: 4.0** **இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2:** இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுமாற்றை விளக்குவார்.

**செயற்பாடு:** "சிங்களத்து மருத்துவச்சி" என்ற கதையை வாசித்து நயந்து கருத்துக்களை முன்வைப்போம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பாடநூல் ("சிங்களத்து மருத்துவச்சி" சிறுகதை)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1
- கதாசிரியர் பற்றிய குறிப்பு - பின்னிணைப்பு - 2
- எழுதுதாள்கள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 4.2.1**

தரம் 10 இல் கற்ற "வேட்கை' என்ற சிறுகதையை மாணவர்களுக்கு ஞாபகப்படுத்துங்கள். அக்கதையினை மையமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கத் தூண்டுங்கள்.

i. கதையின் பிரதான கரு யாது?
ii. இக்கதை உங்கள் மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?
iii. கதையின் மொழிநடை எவ்வாறு அமைந்துள்ளது?
iv. இக்கதை மனித வாழ்வை எவ்வாறு பிரதிபலிக்கின்றது?

பின்வரும் விடயங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- கதையின் மையக்கரு
- அது எவ்வாறு கூறப்பட்டுள்ளது? (உத்திகள்)
- பாத்திரப் படைப்பு
- கதையின் ஆரம்பம், வளர்ச்சி, திருப்பு முனை, முடிவு
- மொழி

(20 நிமி)

**படி 4.2.2**

- பாடநூலிலுள்ள "சிங்களத்து மருத்துவச்சி" என்ற கதையை மாணவர் தனித்தனியே மௌனமாக வாசிக்க வழிநடத்துங்கள்.
- கதை பற்றிக் குறிப்பெடுக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர் எழுதிய குறிப்புகளைப் பார்வையிட்டுக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, கதையிலே கூறப்படும் முக்கிய அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடச் சந்தர்ப்பமளியுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர் அனைவருக்கும் வழங்கி, அதிற் குறிப்பிட்டவாறு செயற்படும்படி நெறிப்படுத்துங்கள்.

(40 நிமி)

**படி 4.2.3**

- மாணவரை எழுமாற்றாக அழைத்து, விடைகளை முன்வைக்கும்படி அறிவுறுத்துங்கள்.
- முன்வைத்த விடைகள் தொடர்பாக, ஏனைய மாணவர் கருத்துக்கள் கூற வழிசெய்யுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

01 - **அலிஸ்நோனா (மருத்துவச்சி)**

- **மானுட நேயம்**

பிரசவ வலியால் துடிக்கும் பொடிமெனிக்காவிடம் பரிவு.
தாயின் முகத்திலே உள்ள வியர்வையைப் பரிவுடன் துடைத்தல்.
"பயப்பட வேண்டாம்" எனத் தாய்க்கு ஆறுதல் கூறல்.

- **புரிந்துணர்வு**

டாக்டர் ஏசியபோது அமைதியைக் கடைபிடித்தல்.
தாயின் உணர்வை உணர்தல்.
டாக்டரின் கடமையுணர்வையும் பதற்றத்தையும் உணர்ந்து பொறுமை காத்தல்.

- **பொறுப்புணர்வு**

சிசுவின் இருதய ஒலியைக் கூர்மையாக அவதானித்தல்.
தாய்க்கு ஆறுதல் கூறல், பொறுப்புணர்வோடு தாயைக் கவனித்தல், குழந்தை பிறக்க உதவுதல், குழந்தை பிறந்த செய்தியை டாக்டருக்கு அறிவித்தல், டாக்டர் ஏசியபோது பொறுமையைக் கடைப்பிடித்தல், அனுபவ அறிவால் குழந்தை இயற்கையாகப் பிறக்கும் என்ற உணர்வுடன் பதற்றமடையாது இருத்தல்.

- **அனுபவசாலி**

இருபத்தைந்து வருட அனுபவத்துடன் கடமையாற்றல்.

- **தீர்க்கதரிசனம்**

தீர்க்கதரிசனத்துடன் குழந்தை சுகமாகப் பிறக்கும் எனல்.

02. **டாக்டர்- மனிதநேயம்**

- பிரசவ வலியால் துடிக்கும் பொடிமெனிக்காவின் துன்பத்தைத் தாளாது பரிதவித்தல்.
- தாயையும் குழந்தையையும் எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று துடித்தல்.

**பொறுப்புணர்வும் கடமையுணர்வும்**

- பொறுப்புணர்வுடன் கடமை செய்தல், எப்படியாவது தாயையும் சேயையும் காப்பாற்ற வேண்டும் என்று செயலாற்றல்.
- அனுபவத்தின் தன்மையை இனங்காணாது செயற்படல்.
- பிழை கண்டவிடத்து, பொறுமையாக விசாரிக்காது நடவடிக்கைக்குத் தயாராதல்.
- உண்மையை உணர்ந்த விடத்து உணர்ச்சிவசப்படல்.

03. டாக்டரின் பங்களாவில் பழைய புகைப்படத்தை மருத்துவச்சி பார்த்துத் திகைத்த கட்டத்திலிருந்து கதைப்போக்கில் ஏற்பட்ட திருப்பம். மருத்துவச்சியையும் டாக்டரையும் பிணைக்கின்ற 25 வருடத்திற்கு முற்பட்ட நிகழ்ச்சி வெளிப்பட்டமை. இதன் பின்னர் டாக்டரிடம் ஏற்பட்ட மனமாற்றம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | |
|---|---|
| 04. | கதையின் தொடக்கம்: கதையினைத் தொடர்ந்து வாசிக்க வேண்டும் எனும் ஆவலைத் தூண்டுகின்ற விதத்திலான பரபரப்பான ஆரம்பம்.<br>வளர்ச்சி ஒவ்வொரு கட்டத்தையும் படிப்படியாக ஆர்வ நிலைத்தூண்டலுடன் வளர்த்து, கதையை உயிரோட்டமுள்ளதாக்கியமை.<br>முடிவு எதிர்பாராத திருப்பத்துடனான முடிவு. இவ்வடிப்படையில் உரிய சம்பவங்களைத் தொடர்புபடுத்தி விளக்குதல். |
| 05. | தலைப்பு கதைக்குப் பொருத்தமாகவே உள்ளது.<br>அனுபவசாலியான சிங்கள இன மருத்துவச்சி ஒருத்தியின் அனுபவச் சிறப்பை முன்னிலைப்படுத்துகின்றது. |
| 06. | மருத்துவச்சியின் முகத்தில் அனுபவம் தெரிதல்,<br>குழந்தையின் இருதய ஒலியை டாக்டரால் கேட்க முடியாதவிடத்து, அனுபவமுதிர்ச்சி கொண்ட மருத்துவச்சியால் கேட்க முடிந்தது.<br>பிரசவம் சிக்கல் நிறைந்ததாக மருத்துவச்சிக்குத் தோன்றவில்லை.<br>பயந்த நிலையில் இருக்கும் தாய்க்குத் தைரியம் கூறினாள்.<br>அனுபவமற்ற மருத்துவருக்கு தைரியம் அளிக்கக்கூடிய மருத்துவச்சியாக இயங்குதல். |
| 07. | - நியமத் தமிழ் உரையாடல்.<br>- சிறு சிறு வாக்கியங்களில் சம்பவங்களை குறிப்பிடுதல்.<br>- சிங்கள மொழிப் பிரயோகம். |
| 08. | - பழமொழிகள்<br>- யானைக்கும் அடி சறுக்கும்<br>- அனுபவம் ஆபத்தைத் தடுக்கும்<br>- அனுபவம் ஆயிரம் நூல்களுக்குச் சமன் |
| 09. | அனுபவ அறிவு உயர்வானது.<br>அர்ப்பணிப்பு நோக்குடன் பொதுப்பணி ஆற்றுதல்.<br>சுயநம்பிக்கையுடன் செயற்படுதல். |

(60 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சிறுகதைகளை அவதானத்துடன் மௌனமாக வாசித்து நயப்பார்.
- நயந்த விடயங்களை குழுவில் கலந்துரையாடுவார்.
- கதையின் கரு, பாத்திரப்படைப்பு, தொடக்கம், வளர்ச்சி, முடிவு, மொழி என்பன பற்றி விமர்சிப்பார்.
- கதையில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்கள், படிப்பினைகள் பற்றி விளக்குவார்.
- கதைகள், சமூக நடத்தைகளின் பிரதிபலிப்புகளே என்பதை ஆதாரங்களுடன் விமர்சிப்பார்.

பின்னிணைப்பு - 1

## செயற்பாட்டுப் பத்திரம்

- கதையை மௌனமாக வாசியுங்கள்.
- கதை பற்றிக் குறிப்பெடுங்கள்.
- குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஏனையவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- பின்னர் தனிநிலையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

1. இக்கதையில் இடம்பெறும் 'அலிஸ்நோனா' என்ற மருத்துவச்சியிடம் நீர் கண்டு நயந்த சிறப்பான குணவியல்புகளை விமர்சிக்குக.
2. 'டாக்டர்' கதாபாத்திரத்தின் குணவியல்புகளை மதிப்பிடுக.
3. கதைப்போக்கின் திருப்புமுனையாக அமைந்த இடம் எதுவென நீர் கருதுகின்றீர்?
   காரணம் தருக.
4. கதையின் தொடக்கம், வளர்ச்சி, முடிவு பற்றி உமது கருத்துக்களைத் தருக.
5. இக்கதைக்கு 'சிங்களத்து மருத்துவச்சி' என்ற தலைப்பு பொருத்தமானதா?
   காரணம் தருக.
6. அனுபவத்தின் மேன்மை இக்கதையில் ஊடுருவியிருக்குமாற்றைத் தருக.
7. இக்கதையின் மொழிநடைபற்றிக் குறிப்பிடுக.
8. இக்கதைக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தருக.
9. இக்கதையின் மூலமாக ஆசிரியர் வலியுறுத்த விரும்பும் வாழ்க்கை நோக்கினை விளக்குக.

பின்னிணைப்பு - 2

### கதாசிரியர் பற்றிய குறிப்பு

இயற்பெயர் : பேராசிரியர் வைத்திய கலாநிதி செ.சிவஞானசுந்தரம்
புனைபெயர் : நந்தி

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து எழுதி வந்தவர். இவர், புனைகதை, நாடகம், மருத்துவ அறிவியல் ஆகிய துறைகளில் தமது எழுத்தாற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.
மலைக்கொழுந்து (1964), தங்கச்சியம்மா (1977), நம்பிக்கைகள் (1989) ஆகிய நாவல்களும், குரங்குகள் (1975) என்ற நாடக நூலும் எண்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் எழுதியுள்ளார். இவரது சிறுகதைத் தொகுதிகள்ஞ ஊர் நம்புமா? (1966), கண்களுக்கு அப்பால் (1984), நந்தியின் கதைகள் (1994) ஆகிய தலைப்புக்களில் வெளியாகியுள்ளன.
மருத்துவத்துறையினர் சார்ந்த கதைகளில் முதலாவதான 'சிங்களத்து மருத்துவச்சி' படிப்பறிவைவிட அனுபவத்தை முதன்மைப்படுத்திய கதையாகும்.
சமூகப் பார்வையுள்ள ஒரு எழுத்தாளராக நந்தி காணப்படுகிறார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1**: பாடப்பகுதிகளை ஈடுபாட்டுடன் வாசிப்பார்.

**செயற்பாடு:** பாரதியாரின் "காலைப்பொழுது" என்ற கவிதையை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

**நேரம்**: 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பாடநூல் ("காலைப்பொழுது"பாடல்)
- பாடல் விளக்கம் (தண்டலை மயில்) - பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
- சொற்களும் அவற்றின் பொருளும் - பின்னிணைப்பு - 3
- அகராதி
- எழுதுதாள்கள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.1.1**

- பின்வரும் பாடலை கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

"தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற்றிருக்கு மாதோ"

- பாடலை உரத்து வாசியுங்கள்.
- பின்வரும் வினாக்களை மாணவரிடம் வினவுங்கள்.

i. கவிஞர் கூற வந்த விடயம் யாது?
ii. இப்பாடலிலே நீங்கள் நயந்த விடயங்களைக் கூறுங்கள்.
iii. அவற்றைக் கவிஞர் எவ்வாறு குறிப்பிடுகின்றார் / வெளிப்படுத்துகின்றார்?
iv. அவ்வாறு வெளிப்படுத்துவதில் உள்ள சிறப்புகள் யாவை?

பின்வரும் விடயங்களை மையப்படுத்தி, மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- பாடலின் பொருள்
- நயத்தற்குரிய விடயங்கள், அணிகள், வர்ணனைகள்
- சொல்லாட்சி

(20 நிமி)

**படி 1.1.2**

- பாடநூலிலுள்ள பாரதியாரின் "காலைப்பொழுது" என்ற பாடலை மாணவர் சோடியாக இணைந்து ஈடுபாட்டுடன் வாசிக்கும்படி நெறிப்படுத்துங்கள்.

- பின்னர், ஒவ்வொன்றிலும் அறுவர் அடங்கிய குழுக்களாக மாணவர் இணைந்து செயற்படும்படி கூறுங்கள்.
- குழுவாக பாடலை இசையுடன் பாட வழிகாட்டுங்கள்.
- குழுநிலையில் கலந்துரையாடி, செயற்பாட்டுப் பத்திரத்தை பூர்த்தி செய்ய அறிவுறுத்துங்கள்.

(40 நிமி)

**படி 1.1.3**

- மாணவரை எழுமாற்றாக அழைத்து விடைகளை முன்னிலைப்படுத்தும்படி நெறிப்படுத்துங்கள்.
- ஒரு குழுவை அழைத்து, பாடலை இசையுடன் பாடச்செய்யுங்கள்.
- முன்வைத்த விடயங்கள் தொடர்பாக, ஏனைய மாணவர்கள் கருத்துக்கள் வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

01. - காலைக்காட்சியின் அழகு
- கீழ்த்திசையில் சூரியன் பார்த்த வெளியெல்லாம் கேடில் சுடர் விடுத்தல்
- பார்த்த இடமெல்லாம் பகலொளி
- தென்றல், தென்னை மரக்கிளையிடையே வீசுதல்
- பட்சி ஜாலங்களின் பல்வேறு ஒலிகள்

02. புலவர் எதிர்பார்க்கும் உலகம்
- மன்னர் அறம் புரிந்தால் உலகம் சிறப்புறும் - நல்லாட்சி
- ஒற்றுமையால் மேன்மையுறல் - ஒற்றுமை
- போரில்லாத வாழ்வு
- வறுமையற்ற வாழ்வு
- ஒன்றுக்கொன்று துன்பமிழைப்பது குற்றமென்று உணர்தல்

03. - காலைக்காட்சியைக் கட்புலப்படுத்துதல்.
- பறவைகளின் குதூகலத்தை வெளிப்படுத்துதல்.
- பறவைகளின் குதூகல உரையாடல் ஊடாக தமது கருத்துக்களை முன்வைத்தல் போன்ற விடயங்கள்.

04. - காலை நேரத்தில் பறவைகளின் செயற்பாட்டை உரையாடல் மூலம் கூறுதல்
- ஓசையுடன் பாடக்கூடியது.
- படிக்குந்தோறும் மனதிற்கு குதூகல உணர்வை ஏற்படுத்தக்கூடியது.

05. மக்கள் அடைகின்ற நன்மை மன்னராட்சியின் சிறப்பிலேயே தங்கியுள்ளது.

(60 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கவிதைகளை ஈடுபாட்டுடன் வாசிப்பார்.
- கவிதைகளில் காணப்படும் சிறப்பம்சங்களை குறிப்பிடுவார்.
- புலவரின் கற்பனையாற்றலை நயந்து விளக்குவார்.
- வேறு சந்தர்ப்பங்களிலும் பாடல்களை ஈடுபாட்டுடன் வாசிப்பார், விமரிசனம் செய்வார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பின்னிணைப்பு - 1

தண்ணிய சோலைகளிலே மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றன. தாமரைகள் விளக்குகளை ஏந்துகின்றன. முகில்கள் முழவம் ஒலிக்கின்றன. குவளைகள் கண்களை விழித்து அக்காட்சிகளை நோக்குகின்றன. தெள்ளிய நீர் திரைக் காட்சிகளை மாற்றிமாற்றித் திரையிடுகின்றது. வண்டுகள் தேனிசை பிழிந்து மகரயாழ் போல ரீங்காரம் செய்கின்றன. இந்த வைபவங்களுக்கு நடுநாயகமாக மருதம் என்கின்ற இளவரசி கொலுவீற்றிருக்கின்றாள்.

பின்னிணைப்பு - 2

## செயற்பாட்டுப் பத்திரம்

I - பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. இப்பாடலில் காலைக்காட்சியின் அழகைப் புலவர் விபரிக்குமாற்றை விளக்குக.
2. புலவர் எதிர்பார்க்கும் உலகம் எத்தகையது?
3. தான் வாசகர்களுக்குக் கூறவந்த விடயங்களை எத்தகைய நுட்பங்களைப் பயன்படுத்திப் புலவர் கூறியுள்ளார்?
4. பாடலில் நீர் நயந்த அம்சங்களைத் தருக.
5. “மன்னர் அறம் புரிந்தால் வையகமெல்லாம்
   மாண்பு பெறும்”
   இப்பாடலடிகள் பற்றி உமது கருத்துக்களைக் குறிப்பிடுக.
6. குழுவாக இணைந்து பாடலை ஓசையுடன் பாடுங்கள்.

பின்னிணைப்பு - 3

**சொற்களும் அவற்றின் பொருளும்**

- மேனிலைமேல் - மேலான இடத்தில் / வானத்தில்
- கேடில் - குற்றம் இல்லாத
- மன்ன - வலிமை பொருந்திய
- வண்ணமுற - அழகாக
- மன்று - சபை
- ஓர்ந்திடவே - ஆராயவே
- மாடமிசை - உப்பரிகையின் மேல் / மேல் தளத்தில்
- சாலநுமை - பெருமையாக உம்மை
- சருவி - கொஞ்சிக்குலாவி
- போதம் - ஞானம்
- ஆங்காணும் - ஆம் காணும்
- மாண்பு - சிறப்பு
- ஏகிற்று - சென்றது
- புட்கள் - பறவைகள்

**தேர்ச்சி: 2.0** **இலக்கியங்களைக் கற்பதன் மூலம் விருத்தி செய்த மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2:** படைப்புக்களின் மொழியாட்சி பற்றிக் கருத்துக்களை முன்வைப்பார்.

**செயற்பாடு:** தொழிற்பாடல்களில் "ஏற்றப்பாடலை" வாசித்து நயந்து கலந்துரையாடுவோம்.

**நேரம்:** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு :**
- நாட்டார் பாடல் - பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
- ஆசிரியர்களுக்கான குறிப்புரை - பின்னிணைப்பு - 3
- எழுதுதாள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 2.2.1

- பின்னிணைப்பு 1 ஐ வகுப்பறையில் காட்சிப்படுத்தி மாணவரை வாசிக்கச் செய்வதன் மூலம் சிந்திக்கத் தூண்டுங்கள்.

- இப்பாடலில் நீங்கள் இரசித்த அல்லது நயந்த பகுதி எது?

- இப்பாடல் என்ன கருப்பொருளை மையமாகக் கொண்டது? நாட்டார் பாடல்களை வாசித்து ரசித்துள்ளீர்களா? நாட்டார் பாடல்களின் தனித்துவமான பண்புகள் எவை? போன்ற வினாக்களை வினவி கீழ்வரும் விடயங்களையும் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| • கிராமியப் பாடல்களின் இயல்பு நிலை |
| • சந்தர்ப்பங்களும் வெளிப்பாட்டுப் பாங்கும் |
| • இப்பாடல்களில் காணப்படும் சுவை |
| • பாடல்களில் இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்கள் |
| • பாடல்களில் வெளிப்படும் கிராமிய பண்பாட்டு விழுமியங்கள் |

(15 நிமி)

### படி 2.2.2

- மாணவரை குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஏற்றப்பாடலை வழங்குங்கள்.
- ஒவ்வொருவரும் பாடலை முழுமையாக வாசிக்க வழிசெய்யுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்கி செயற்படுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமி)

### படி 2.2.3

- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாட்டுப்பத்திரத்தினை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
- ஒரு குழு விடயத்தை சமர்ப்பிக்கும்போது மற்றைய குழுக்கள் அவதானித்து கருத்துரைக்கச் செய்யுங்கள்.
- ஏற்றப்பாடலை குழுவாக இசையுடன் பாடச் செய்யுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த விடயப் பொருத்தப்பாட்டினை அறிந்து கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- தொழிற்பாடல்கள் உடல் உழைப்புடன் தொடர்புடையன. எனவே தொழில் செய்யும்போது உடற்சோர்வு, மனச்சோர்வு ஏற்படாமல் இருக்கப் பாடல்களைப் பாடுவது வழக்கம். இதனால் வேலைச் சுமை அவர்களுக்குத் தெரியாது போய்விடும்.

- ஏற்றம் என்பது நீர் இறைத்தல் தொழிலுடன் தொடர்புடையது, துலா மிதித்து, பட்டையால் வயல்களுக்கு நீர் பாய்ச்சும் பொறிமுறை.

- மழைக்காலம் / மாரிக்காலம் (மழை, வெள்ளம், மீனவர்கள், பறவைகள் பற்றிப் பேசப்படுவதால்)

- தசாவதாரத்தில் வாமன அவதாரக் கதையைச் சுருக்கமாகக் குறிப்பிடுதல்.

- ஒரு 'பதிகம்' பாடப்படும் நேரத்தில் பத்துப்பட்டை நீரிறைக்கப்படும். ('பதிகம்' - பத்துப்பாட்டுக் கொண்ட இலக்கிய வடிவம்.)

- பேச்சுவழக்குச் சொற்கள்

  ஆத்தை - ஆற்றை
  பேய - பெய்ய
  தண்ணீ - தண்ணீர்
  குளிச்சு - குளித்து

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. நாட்டார் பாடல்களின் சிறப்பினை அறிந்து கூறுவார்.
2. அப்பாடல்களில் காணப்படும் சுவைகளை நயந்து உரையாடுவார்.
3. பாடலை இசையோடு பாடுவார்.
4. நாட்டார் பாடல்கள் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புபட்டுள்ளன என்பது பற்றிக் கருத்துரைப்பார்.
5. ஏனைய நாட்டார் பாடல்களையும் தொகுத்து ஒப்படைப்பார்.
6. பாடலில் இடம்பெற்றுள்ள பேச்சுவழக்குச் சொற்களின் எழுத்து வழக்கினை எடுத்துரைப்பார்.
7. நாட்டார் பாடல்கள் கிராமிய பண்பாட்டு விழுமியங்களை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பது பற்றிக் கருத்துரை வழங்குவார்.

பின்னிணைப்பு - I

சட்டியில மாகரைச்சு சந்தியெல்லாம் கோலமிட்டு
கோலம் அழியும்வரை கோடி மழை பெய்யாதோ
மாரிமழை பெய்யாதோ மக்க பஞ்சந் தீர
சாரமழை பெய்யாதோ சனங்க பஞ்சந் தீர
வடக்கே மழை கறுக்க வரும் கிழக்கே வெள்ளம்
குளத்தாங்கரையில அயிரதுள்ளும் - நல்ல
நெல்லுக் கதிரறுத்து புள்ள
நெளி நெளியாக கட்டுக்கட்டி
கட்டுக் கொண்டு போகயில - புள்ள
கண்ணடிப்பான் அத்த மகன்

பின்னிணைப்பு - 2

## செயற்பாட்டுப் பத்திரம் - I

1. நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
2. ஏற்றப்பாடல் என்றால் என்ன?
3. "ஓரடியால் இந்த உலகளந்த ராமா" இவ்வடி மூலம் விளக்கப்படும் கதை யாது?
4. "ஒரு பதியாலொண்ணு" என்ற தொடர் மூலம் விளங்கிக் கொள்வது யாது?
5. கீழ்வரும் சொற்களை (எழுத்து வழக்கில்) திருத்தமாக எழுதுக.

   i. ஆத்தை
   ii. பேய
   iii. தண்ணி
   iv. குளிச்சு

பின்னிணைப்பு - 3

ஆசிரியருக்கான குறிப்புரை

- ஓரடியால் இந்த உலகத்தை அளந்த ராமா ஒரு பதியாலொண்ணு - என்பதற்கான விளக்கம்.

  ஏற்றம் இறைப்போர் நீரை இறைப்பதற்காக ஒரு கணிப்பீட்டு முறையைக் கையாள்வார். எத்தனைமுறை நீரிறைத்தால் நிலம் நிரம்பும் என்ற கணக்கின்படியே இயங்குவர். இங்கே முதலாவது முறை இறைக்கப்படும்போது ஒரு பதியால் ஒன்று எனக் குறிப்பிடுகின்றனர். அத்துடன் கடவுள் வணக்கமும் இடம்பெறுகின்றது.
  ஓரடியால் இந்த உலகு அளந்தவன் வி'ணு. ஆனால் கிராம மக்களிடம் வி'ணுவின் அவதாரமான இராமன் செல்வாக்குப் பெற்றதால் 'ராமா' என்று அழைத்தனர்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.4**: விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

**செயற்பாடு:** "இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்" என்ற கட்டுரையினை வாசித்து விமர்சிப்போம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பாடநூல் "இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்"
- செயற்பாட்டுப் பத்திரங்கள் - பின்னிணைப்பு - 1
- ஆசிரியருக்கான குறிப்புரை - பின்னிணைப்பு - 2
- எழுதுகருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.4.1**

தரம் 10 இல் கற்ற "காளத்திவேடனும் கங்கைவேடனும்" என்ற கட்டுரையினை மாணவருக்கு ஞாபகப்படுத்துங்கள்.

1. கட்டுரையாசிரியர் யார்?
2. ஆசிரியரின் நோக்கம் யாது?
3. இலக்கிய இன்பம் நுகர்வதற்கு ஆசிரியர் கையாண்ட உத்திகள் யாவை?

போன்ற வினாக்களை வினவி மாணவருடன் கலந்துரையாடுங்கள். கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

- கட்டுரை மூலம் வெளிப்படுத்தப்படும் விடயம்
- உத்திகள்
- இலக்கியப் பாத்திரங்களை ஒப்பிட்டு நோக்குதல்
- பாத்திரங்களின் நடத்தைகளையும் செயற்பாடுகளையும் சித்திரிப்பதில் மேலைத்தேயப் புலவரும், கீழைத்தேயப் புலவரும் வேறுபடும் விதம்
- மொழிநடை

(20 நிமி)

**படி 1.4.2**

- மாணவர்களை 5 பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- பாடநூலில் உள்ள "இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்" என்ற கட்டுரையினை வாசிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, மாணவர்களைக் கலந்துரையாடச் செய்யுங்கள்.
  - பாத்திரங்களின் குணவியல்புகள்
  - ஒப்பிட்டு நோக்கும் தன்மை
  - கட்டுரையாசிரியர் கூற முனையும் விடயம்
  - மொழிநடை

- தேவையானவிடத்து வழிகாட்டுங்கள்.
- கலந்துரையாடிய விடயங்களில் தெளிவு ஏற்பட்டவுடன் செயற்பாட்டுப் பத்திரங்களை அனைவருக்கும் வழங்கி, தனித்தனியே விடை எழுதுமாறு அறிவுறுத்துங்கள்.

(60 நிமி)

**படி 1.4.3**

- மாணவர்களை வகுப்பு நிலையில் அமரச் செய்யுங்கள்.
- மாணவர்களை எழுமாற்றாக அழைத்து ஒருவர் ஒரு வினாவுக்கான விடையை மட்டும் முன்வைக்கும்படி அறிவுறுத்துங்கள்.
- இவ்வாறாக அனைத்து விடைகளும் முன்வைக்கப்பட்டதன் பின், விடைகள் தொடர்பாக ஏனைய மாணவரின் கருத்துக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை முன்வைத்துக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- மேற்குலக இலக்கியங்களில் கதாபாத்திரங்களின் குணவியல்புகள் எடுத்துக்காட்டப்பட்ட விதம்.

புரூட்டஸ்
நல்லவன், பரோபகாரி, பெரிய நீதிமான், எளிதில் ஏமாந்து போகக்கூடியவன், அவமானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவன். லௌகீக தந்திரங்களை கையாளத் தெரியாதவன்.

க ியஸ்
தந்திரச் செயல்களால் பிறரை எளிதில் ஏமாற்றக்கூடியவன். இடம், ஆள் அறிந்து தன் காரியத்தைச் செயற்படுத்துவதில் திறமைமிக்கவன்.

சீசர்
மகா பராக்கிரமசாலி, கருமங்களை எண்ணித் துணிபவன், துணிந்த பின் அக்கொள்கையில் இருந்து மாறாதவன். அச்சம் என்பதை அறியாதவன்.

அன்ரனி
மகா விவேகி, பெரிய சூழ்ச்சிக்காரன், வாய்ப்பேச்சில் வல்லவன், யாருக்கும் தெரியாது குழிபறிக்கும் தந்திரம் நிறைந்தவன்.

- சீசரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக விளங்கிய புரூட்டஸே சீசருக்குத் துரோகம் செய்துவிட்டான் என்ற உணர்வு.

- புரூட்டஸின் மரணம்
  பழிக்கஞ்சிய மரணமாக இருக்கவில்லை. யாரும் எண்ணிக் கண்ணீர் விடும் ஒருவனாக அவன் மரணிக்கவில்லை.

- அற்பர்களிடம் அகப்பட்டு, அவமானப்படுவதற்கு அஞ்சி புரூட்டஸ் தற்கொலை செய்துகொள்கிறான். அவனுக்காக யாரும் இரக்கப்படவில்லை.

ஆனால், பாண்டியன் நெடுஞ்செழியன், பழிக்கஞ்சிச் சாகவில்லை. தன் தவறினை உணர்ந்து, உணர்ந்த அந்தக் கணமே உயிரை நீத்தான். அவன் பத்தினியும் உடன் செல்லுகின்றாள். பாண்டியன் தேவர்களுக்கு நல் விருந்தாளியாகின்றான்.

- புரூட்டஸின் மரணத்தை போல பாண்டியனின் உயிர் நீப்பு அமையவில்லை. பாண்டியன் நெடுஞ்செழியனின் மரணம் மக்களால் நினைவுகூரக்கூடியதாகும்.

- பாண்டியன் நெடுஞ்செழியன் சிறப்பு:

நீதிமான், நீதிபிழைத்தது கண்டவுடனேயே உயிர் துறக்கிறான். அதனால் வல்வினையால் வளைந்த கோல் செல்லுயிரால் நிமிர்ந்து செங்கோலாகின்றது. புகழ்ச் சோழரைக் காட்டிலும் மேம்பட்டவனாகின்றான்.

- சில சந்தர்ப்பங்களில் நீதியே கைகொடுக்காது விடக்கூடும் அவ்வேளைகளில் தந்திரோபாயங்களைக் கையாள்வதன் மூலம் ஆபத்துக்களிலிருந்து விடுபடலாம்.

- பண்டிதமணி சி.கணபதிபிள்ளை
- மேற்குலகின் இலக்கிய சிருஷ்டிப்பைவிட கிழக்குலகின் இலக்கிய சிருஷ்டிப்பைச் சிறப்பாகக் காட்ட முனைகிறார்.

- உதாரணம்: **மேற்குலகில்** புரூட்டஸ்ஸின் மரணம் பழிக்கஞ்சிய மரணமாக இல்லாமல் அற்பர்களிடம் அகப்பட்டு அவமானப்படுவதற்கு அஞ்சிய மரணமாக அமைகிறது. அவனுக்காக யாரும் இரக்கப்படவில்லை. கிழக்குலகில் பாண்டியன் நெடுஞ்செழியனின் மரணம் பழிக்கஞ்சிய மரணமாக அமைவதோடு, தன் தவறினை உணர்ந்த அந்தக் கணமே உயிரை விடுகிறான். அவன் பத்தினியும் உடன் உயிரை விடுகிறாள். பாண்டியன் தேவர்களுக்கு நல் விருந்தாளியாகிறான்.

- மேற்குலக இலக்கியத்தையும் கிழக்குலக இலக்கியத்தையும் ஒப்பிட்டமை.
- இரண்டு இலக்கிய உலகங்களினதும் கதாபாத்திர குண இயல்புகளை ஒப்பிட்டமை.
- புரூட்டஸின் மரணம் - பாண்டியன் நெடுஞ்செழியனின் மரணம் பற்றி கூறப்பட்டமை.

- இலக்கியத்திற்கே உரிய செந்தமிழ் நடையாக அமைந்துள்ளது.
- பொருத்தமான இடத்தில் பொருத்தமானவாறு மேற்கோள் காட்டும் விதம் சிறப்பானது.

- கிழக்குலகின் இலக்கிய சிருஷ்டிப்பை சிறப்பாகக் காட்டுகின்ற உச்சத்தன்மை. பொருத்தமான மேற்கோள்களை பல்வேறு இலக்கியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டும் விதம்.
- கட்டுரையை நகர்த்திச் செல்வதற்கு பயன்படுத்திய கதாபாத்திரங்கள்.

(40 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கட்டுரையினை வாசித்துப் பிரதான கருத்துக்களைக் கூறுவார்.
- கட்டுரையில் கையாளப்பட்டுள்ள உத்திகளை விளக்கிக் கூறுவார்.
- ஒப்பீட்டு முறையிலமைந்த கட்டுரைகளைத் தேடி வாசிப்பார்.
- கட்டுரையாசிரியர் தொடர்பான குறிப்புகளை எழுதுவார்.

பின்னிணைப்பு - 1

---

## செயற்பாட்டுப் பத்திரம் - 1

- 'இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்' என்ற கட்டுரையினைக் கருத்தூன்றி வாசியுங்கள்.

- குழுவாக இணைந்து பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுங்கள்.
    - பாத்திரங்களின் குணவியல்புகள்
    - ஒப்பிட்டு நோக்கும் தன்மை
    - கட்டுரையாசிரியர் கூறும் விடயம்
    - மொழிநடை

- கலந்துரையாடலின் பின், கீழ்வரும் வினாக்களுக்குத் தனித்தனியே விடை எழுதுங்கள்.

1. மேற்குலகின் இலக்கியக் கதாபாத்திரங்களான:
    i. சீசர்
    ii. கசியஸ்
    iii. புரூட்டஸ்
    iv . மார்க் அன்ரனி ஆகியோரின் குணவியல்புகளை விமர்சன ரீதியாக விளக்குக.

2. 'புரூட்டஸ் நீயுமா?' என்ற சீசரின் வினா உமது உள்ளத்தில் எத்தகைய உணர்வை ஏற்படுத்துகின்றது?

3. புரூட்டஸின் மரணம் பற்றி யாது கூறுவீர்?

4. புரூட்டஸின் மரணம் பற்றியும் பாண்டிய மன்னனின் மரணம் பற்றியும் கட்டுரையாசிரியர் கூற வருவது என்ன?

5. "இலக்கிய இரசிகர்களே! வாருங்கள். சற்றே கண்ணீர் விடுவோம். புரூட்டஸ் மரணத்துக்கு அல்ல. பாண்டியன் நெடுஞ்செழியன் பிரிவுக்கு" இக்கூற்றுப் பற்றிக் கருத்துரை வழங்குக.

6. இக்கட்டுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்பு எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

7. "நீதி ஆபத்துக் குதவாது பௌதிக தந்திரந்தான் ஆபத்சகாயன்" எனும் கூற்று பற்றி யாது கூறுவீர்?

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## செயற்பாட்டுப் பத்திரம் - 2

- இருவர் இருவராக இணைந்து பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

    i. இக்கட்டுரையின் ஆசிரியர் யார்?
    ii. கட்டுரையினூடாக அவர் கூற வந்த விடயம் என்ன?
    iii. அதனை விளக்குவதற்கு அவர் கையாண்ட உத்திகள் யாவை?
    iv. கட்டுரையின் மொழிநடை பற்றி யாது கூறுவீர்?
    v. இக்கட்டுரையின் சிறப்பம்சங்களாக நீர் கருதுபவற்றைத் தொகுத்தெழுதுக.

பின்னிணைப்பு - 2

---

**ஆசிரியருக்கான குறிப்புரை:**

'விஞ்சு வான்-----------' என்று தொடங்கும் பாடலின் பொருள்:

"போர்க்களத்தில் மிகுந்த மேகம் பொழியும் மழைத்தாரைபோல மிகச் செம்மையாகப் பகைவர் வீசிய அம்புகளும் வேல்களும் தம்மீது தாக்கப் போர்புரியும் ஆற்றலற்ற வஞ்சகர்களுடைய கொடிய செயல்களால், மானம் என்னும் சிறந்த மாணிக்கத்தை இழந்து, உயிர் துறக்காமல் பிழைத்து நின்றவர்களின் நெஞ்சுபோல, அப்பாலை நிலம் என்றும் தணியாமல் கொதிக்கும்."

கம்பராமாயணம், பாலகாண்டத்தில் இடம்பெறும் இப்பாடல், பாலைவனத்தின் வெம்மையின் கொடுமையினை விபரிப்பதாக அமைந்துள்ளது. பண்டிதமணியவர்கள் தமது கட்டுரையில் இப்பாடலை எவ்வாறு பொருத்தமாகக் கையாளுகிறார் என்பதை ஆசிரியர்கள் விளக்குதல் வேண்டும்.

இவ்வாறே ஏனைய பாடல்களையும் கட்டுரையுடன் தொடர்புபடுத்தி விளக்க வேண்டும்.

வாசாலகன் - பேச்சில் வல்லவன்
அகழான் - வயல் எலி

தேர்ச்சி: 3.0 — பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

தேர்ச்சி மட்டம் 3.1: — பல்வேறு வகைப்பட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார்.

செயற்பாடு: — "பறாளை விநாயகர் பள்ளு" பாடல்களை வாசித்து நயந்து கருத்துக்களை முன்வைப்போம்.

நேரம்: — 120 நிமிடங்கள்

தர உள்ளீடு :
- பாடநூல் ("பறாளை விநாயகர் பள்ளு" பாடல்கள்)
- சின்னத்தம்பிப் புலவர் பற்றிய அறிமுகம் - பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
- ஒலிநாடா (வானரங்கள் கனி கொடுத்து - பாடல்)
- எழுதுகருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 3.1.1**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவி திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல்இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே

என்ற பாடலை ஒலிநாடாவில் ஒலிக்கச் செய்யுங்கள் / பாடிக்காட்டுங்கள்.

- இப்பாடல் எத்தகைய காட்சிகளை வர்ணிக்கின்றது?
- எத்தகைய வளங்கள் பற்றி கவிஞர் கூறுகின்றார்?
- இப்பாடலின் ஓசை நயம் பற்றி யாது கூறுவீர்?
- இயற்கை வளம் பாடுதல் என்ற வகையில் இலங்கை வளம் பற்றி பாடிய புலவர்கள் சிலரின் பெயர்களைக் கூறுக.

இவ்வாறான வினாக்களை வினவி, இலங்கை வளம் பற்றிப்பாடிய புலவர்கள், பாடல் சிறப்புக்கள் என்பன பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

- ஈழத்துப் புலவர்கள் பற்றிய அறிமுகம்
- சின்னத்தம்பிப் புலவரின் சிறப்புக்கள்
- பள்ளு இலக்கிய வடிவம் பற்றிய அறிமுகம்
- பாடலின் பொருள், நயம், வர்ணனைகள், அணிகள்
- சொல்லாட்சி

(20 நிமி)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 3.1.2

- மாணவர் இருவரிருவராக இணைந்து பாடநூலில் உள்ள பறாளை விநாயகர் பள்ளு பாடல்கள் இரண்டினையும் வாசிக்க வழிசெய்யுங்கள்.
- அருஞ்சொற்களை இனங்கண்டு பொருள் விளங்க உதவுங்கள். தேவையாயின் அகராதியைப் பயன்படுத்தச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கி, இருவரும் கலந்துரையாடி விடையளிக்க அறிவுறுத்துங்கள்.

(60 நிமி)

படி 3.1.3

- ஐந்து அல்லது ஆறு மாணவர்களை அழைத்து விடைளை முன்வைக்கச் சொல்லுங்கள்.
- முன்வைத்த விடைகள் தொடர்பாக, ஏனைய மாணவர்களும் தமது கருத்துக்களை வழங்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- சரியான முறையில் சந்தி பிரித்து எழுதப்பட்டிருத்தல்.
- ஈழநாட்டின் இயற்கை வளம்

- அழகிய தாமரை மலர்கள் பூத்திருக்கும் நீர்நிலைகளில் அன்னக் குழாம் ஆனந்தமாக விளையாடுதல்.
  நீர்நிலைகளில் நிலைபெற்றிருக்கும் எருமைகள் சுறாக்களைச் சீறுதல்.
  சுறாக்கள் பாய்ந்து பலாக்கனிகளைக் கீறுதல்.
  பலாக்கனிகளின் சுளைகள் இஞ்சியை வேலியாகவுடைய மஞ்சளில் போய் விழுதல்.

- **அணிகள்** உதாரணம்:
  உவமை : மயில்கள் போல் மடவார்கணம்
  உயர்வு நவிற்சி : மஞ்சு அளாவிய மாடங்கள்

- **நயம்**
  அணிகள், சொற்கள், வர்ணனை, ஓசை நயம், இயற்கைப் பொருள்களின்
  செயற்பாடுகளைத் தொடர்புபடுத்திக் கற்பனை செய்தல் என்பவற்றை நயந்து எழுதுதல் வேண்டும். இவற்றோடு நிகழ்வுகள் சங்கிலிக் கோர்வையாகக் கூறப்படும் தன்மை பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

✹ இரண்டாவது பாடலில் ஈழநாட்டின் இயற்கைவளம் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

- அருவியானது ஓசையுடன் வழிகின்ற குளிர்ச்சியான மலைப்பக்கம்.
- புலிநகத்தாலான ஆபரணம் அணிந்த அழகிய குறப்பெண்கள்.
- குறப்பெண்கள் தினைப்புனத்தில் பயிர்களைக் காக்கும் பொருட்டு கிளிகளை விரட்டுதல்.
- கிளிகளை விரட்டுவதற்கு பயன்படுத்தும் கருவியை சிறப்பிக்கும் தன்மை.
- கிளிகளை விரட்ட பயன்படுத்தும் கருவியான கவணில் இரத்தினக் கற்கள் தொடுத்து குறிபார்த்தல்.

நயந்த பகுதி
மருவு வண்குறப் பேதையர் கட்செவி
மாசு ணப்பன நேர்கவண்மீதி
லிருளி லாத மணிவைத் தெறிந்திடு
மீழ மண்டல நாடெங்க னாடே

காரணம்
கிளியை விரட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவியானது (கவண்) கண்ணே செவியாகவுடைய பாம்பின் படம்போல இருக்கும் என்பதும், அதில் இரத்தினக் கற்கள் தொடுத்து விரட்டுவது என்பதும் நயத்தற்குரியது.

(40 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாடல்களைச் சந்திபிரித்து வாசிப்பார்.
- பாடல்களில் இடம்பெற்றுள்ள அணிகளின் சிறப்பினை உதாரணங்களுடன் விளக்கி எழுதுவார்.
- பாடல்களை வாசித்து, நயந்து, கருத்துக்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வார்.
- பல்வேறு பாடல்களையும் ஆர்வத்துடன் தேடி வாசிப்பார்.

பின்னிணைப்பு - 1

**நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் (1716 - 1780)**

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இலங்கைத் தமிழ்க் கவிஞருள் குறிப்பிடத் தகுந்த ஒருவராக விளங்குபவர், நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர். ஒல்லாந்தர் ஆட்சியிற் கச்சேரி முதலியாராகப் பணியாற்றியவரும், கல்வி கேள்விகளில் வல்ல வித்துவானாக விளங்கியவருமான வில்லவராய முதலியாரின் இளைய மைந்தரே சின்னத்தம்பிப் புலவராவார்.

இவர் செல்வ வளமும் வித்துவச் சிறப்பும் கொண்ட குடும்பப் பின்னணியிலே தோன்றியவர். சிறுவயதிற் குறும்புத்தனம் மிக்கவராக விளங்கினார். ஆயினும், இளமையிலேயே கவிபாடும் திறமையை கைவரப் பெற்றிருந்தார். கல்வளையந்தாதி, மறைசையந்தாதி என்னும் இரு அந்தாதிகளையும், கரவைவேலன் கோவை, பறாளை விநாயகர் பள்ளு ஆகியவற்றையும் இயற்றியுள்ளார். இவற்றுள் பறாளை விநாயகர் பள்ளு சின்னத்தம்பிப் புலவரின் ஆளுமையைப் புலப்படுத்தும் குறிப்பிடத்தக்க படைப்பாகும்.

பின்னிணைப்பு - 2

**செயற்பாட்டுப்பத்திரம் - 1**

- இருவரிருவராக இணைந்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.
  - முதலில் இரு பாடல்களையும் வாசியுங்கள்.
  - இருபாடல்களையும் சந்தி பிரித்து எழுதுங்கள்.
  - முதலாவது பாடலில் ஈழ நாட்டின் இயற்கை வளம் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுகின்றது?
  - இப்பாடல்களில் இடம்பெற்றுள்ள அணிகளை உதாரணங்களுடன் விளக்குக.
  - இப்பாடல்களில் நீர் நயந்த விடயங்களை உதாரணங்களுடன் விளக்குக.
  - இரண்டாவது பாடலில் காணப்படும் சிறப்புயாது?
  - இப்பாடலில் நீர் நயந்த பகுதியையும் அதற்கான காரணத்தையும் விளக்குக.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

தேர்ச்சி: 3.0 — பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

தேர்ச்சி மட்டம் 3.2: — படைப்புகள் குறித்து சிந்தித்து கலந்துரையாடி தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

செயற்பாடு: — "தேருளைப் புரவி" என்ற கம்பரின் பாடலின் மூலம் ஆற்றுப்படை இலக்கியத்தின் சிறப்பினை அறிவோம்.

நேரம்: — 120 நிமிடங்கள்

தர உள்ளீடு :
- "தேருளைப் புரவி" - செய்யுள்பகுதி
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1
- எழுதுதாள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 3.2.1**

✹ இப்பாடலைக் காட்சிப்படுத்துங்கள்.

பொன்பூச்சொரியும் பொலிந்த செழுந்தாதிறைக்கும்
நன் பூதலத்தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரபை
வீசு புகழ் நல்லூரான் வில்லவராயன் கனக
வாசலிடைக் கொன்றை மரம்

வடதேசத்து வித்துவானொருவர் வில்லவராய முதலியார் வீட்டை விசாரித்துக் கொண்டு வந்தார். தெருவிலே சிறுவர்கள் விளையாடிக்கொண்டு நிற்கின்றார்கள். இலக்கணத் தமிழில் முதலியார் வீடு யாதோ? என்று வடதேசத்து வித்துவான் சிறுவர்களை வினாவினார். ஒரு சிறுவன் தலை நிமிர்ந்து விளையாட்டாகப் பாடியது இப்பாடல்.

- இப்பாடலை ஓசையுடன் பொருள் விளங்க வாசித்துக் காட்டுங்கள்.
- இப்பாடலைப் பாடியவர் யார்?
- எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது?
- இப்பாடல் மூலம் என்ன உணர்த்தப்படுகின்றது?

இது போன்ற கருத்துடைய பாடல்கள் தமிழில் காணப்படுகின்றனவா? போன்ற வினாக்களை மாணவரிடம் வினாவி பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொண்டு கலந்துரையாடுங்கள்.

- தமிழில் புறநானூற்று இலக்கியங்களில் ஆற்றுப்படை செய்யுள்கள் இடம்பெறுகின்றன.
- பாட்டுடைத் தலைவனின் கொடைச்சிறப்பு, நாட்டுவளம் என்பவற்றை ஆற்றுப்படை இலக்கியங்கள் எடுத்துக்கூறுதல்.
- அதற்காகச் சிறந்த உவமைகள் அப்பாடலில் இடம்பெறும் தன்மை.
- உத்திகள்.

(20 நிமி)

படி 3.2.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- தேருளைப் புரவி என்ற செய்யுட்பகுதியினை எல்லா மாணவர்களுக்கும் வழங்கி அதனை வாசிப்பதற்கும், பொருள் விளங்குவதற்கும் வழிகாட்டுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்தினை அனைவருக்கும் வழங்கி அறிவுறுத்தல்களின்படி செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(60 நிமி)

படி 3.2.3

- மாணவர்கள் விடைகளை முன்வைப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - ஆற்றுப்படுத்தல் என்பது வழிப்படுத்துதல் எனப் பொருள்படும்.
>     - அரசனிடம் பொருள் பெற்ற புலவர் ஒருவர் இன்னொரு புலவருக்கு அம்மன்னனிடம் சென்று பொருள் பெறுமாறு வழிப்படுத்துதல்.
>     - வீடுபேறு கருதி நிற்பவர்களை இறைவனிடம் ஆற்றுப்படுத்துதலும் உண்டு.
>
> - அரசர்களின் கொடைச் சிறப்பினையும் அவனது நாட்டு வளங்களையும் எடுத்துக்கூறுவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.
>
> - ஏகம்பவாணன் என்ற அரசனிடம் தேர்களையும் பிடரி மயிருடைய குதிரைகளையும் யானைத் திரள்களையும் பரிசாகப் பெற்று வருகின்ற புலவன் என்பதனூடாக வெளிப்படையாகவும், "இத்தனையும் கப்பமாகப் பெற்று வருகின்ற வேந்தே! உனது நாமம் எது?" (நிறையப் பொருள் கொண்டு வருவதால் வேந்தன்) எனச் சிறப்பிக்கப்படுகின்றமையால் மறைமுகமாகவும் கொடைச்சிறப்பு வெளிப்படுத்தப்படுகின்றது.
>
> - உதாரணம்: முத்தினாலாகிய மாடமாளிகைகள், அவற்றைச் சூழ நிற்கும் மரங்கள். இவை மூலம் அம்மன்னனின் வாழிடம் சிறப்பிக்கப்படுகின்றது.
>
> - வினாவிடை முறையிலான ஓர் உரையாடலைக் கையாளுதல்.
>
> - மனித நேயப் பண்புகள்:
>     - பொருள் வளம் இருப்போர் இல்லார்க்கு ஈகை செய்தல்.
>     - தான் பெற்ற இன்பம் மற்றவரும் பெற்று மகிழ வேண்டும் என்ற நல்லெண்ணம்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. ஆற்றுப்படை இலக்கியங்களின் பண்பினை அறிந்து கூறுவார்.
2. புறநானூற்று இலக்கியங்களில் உள்ள ஆற்றுப்படைகள் சிலவற்றைத் தெரிந்து கூறுவார்.
3. அவ்விலக்கியங்களில் இடம்பெறும் அரசர்களது ஈகைச் சிறப்பினையும் நாட்டு வளங்களையும் அறிந்து எழுதுவார்.
4. கையாளப்பட்ட உத்திகளை இனங்கண்டு எழுதுவார்.
5. அருஞ்சொற்களுக்குரிய பொருளை அறிந்து எழுதுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பின்னிணைப்பு - 1**

**செயற்பாட்டுப்பத்திரம் - 1**

- குழுநிலையில் கலந்துரையாடிய பின்னர் தனித்தனியே பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. ஆற்றுப்படுத்தல் என்பதன் பொருள் யாது?
2. இக்கருத்து ஆற்றுப்படை இலக்கியங்களில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது?
3. ஆற்றுப்படை இலக்கியங்களின் நோக்கம் யாது?
4. இப்பாடலில் அரசனின் கொடைச் சிறப்பு வெளிப்படுத்தப்படுமாற்றினை எடுத்துக்கூறுக.
5. அரசனின் வாழிடம் எவ்வாறு அறிமுகம் செய்யப்படுகின்றது?
6. இப்பாடலில் ஆசிரியர் கையாண்ட உத்தி என்ன?
7. இப்பாடலில் இடம்பெறும் மனித நேயக்கருத்துகள் எவை?

தேர்ச்சி: 1.0 — இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 1.3: — படைப்புக்களை நயந்து அவற்றின் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

செயற்பாடு: — பிரான்ஸ் நாட்டவரான மொப்பஸான் எழுதி, புதுமைப்பித்தன் மொழிபெயர்த்த "பைத்தியக்காரி" சிறுகதையை வாசித்துக் கருத்துக்களை முன்வைப்போம்.

நேரம்: — 120 நிமிடங்கள்

தர உள்ளீடு :
- பாடநூல் "பைத்தியக்காரி" கதை
- ஆலமரம் (கதை) பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
- எழுது கருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 1.3.1

மாணவர்களுக்கு ஆலமரம் என்ற கதையை வழங்கி, வாசிக்கச் செய்யுங்கள்.

- இச்சிறுகதை தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- கதைக்கரு, கதையில் வரும் பிரதான கதாபாத்திரம் பற்றி வினவுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

| |
|---|
| • கதைக்கரு |
| • கதைக்களம் |
| • மொழிநடை |
| • ஆசிரியரின் நோக்கம் |
| • கையாண்ட உத்திகள் |
| • கதையின் ஆரம்பம், வளர்ச்சி, முடிவு |

(20 நிமி)

### படி 1.3.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- 'பைத்தியக்காரி' என்ற கதையை தனித்தனியே வாசித்து விளங்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- குழுக்களுக்குச் செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்கள் குழுநிலையில் கலந்துரையாடி, செயற்பாட்டுப்பத்திரத்தைப் பூர்த்தியாக்க வழிசெய்யுங்கள்.

(60 நிமி)

### படி 1.3.3

- மாணவர்ளை வகுப்பு நிலைக்கு வரச்சொல்லுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை எழுப்பி விடைகளை முன்வைக்க அறிவுறுத்துங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- முன்வைத்த விடைகள் தொடர்பாக ஏனையவர்கள் கருத்துக்கள் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

மூலக்கதையின் ஆசிரியர் : மொப்பஸான்
மொழிபெயர்த்தவர் : புதுமைப்பித்தன்

- புதுமைப்பித்தனின் இயற்பெயர் சோ.விருத்தாசலம்
- 1906 - 1948 வரையான கால வாழ்வு
- ஒருநாள் கழிந்தது, துன்பக்கேணி, அகலிகை, காலனும் கிழவியும், பொன்னகரம் போன்ற சிறுகதைகளையும் கட்டுரை, மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் போன்றனவற்றையும் எழுதினார்.
- சிறுகதையின் தந்தை, மன்னன் எனப் போற்றப்பட்டவர்.
- மத்தியதர மக்களின் வாழ்வியலைக் கருவாக்கி எழுதியவர்.
- இவர் கதைகளில் எள்ளலும், துன்பியலும், நகைச்சுவையுடன்கூடிய மொழிநடையும் காணப்படும்.

கதாபாத்திரங்களின் குணவியல்புகள்:

**பைத்தியக்காரி** : உதாரணம் -
தொடர்ந்து வரும் துன்பங்களைச் சகிக்க முடியாத மனோநிலையுடையவள்.
**வேலைக்காரி** : உதாரணம் -
இரக்கம் கொண்டவள், உதவும் மனப்பான்மையுடையவள்.
**இராணுவ அதிகாரி**: உதாரணம் - முரடன், இரக்கமற்றவன்

மொழிநடை
- சிறு சிறு வசனங்கள், நகைச்சுவையும் கேலியும் கலந்த நடை, வடமொழிச் சொற்கலப்பு - உதாரணங்களுடன் விளக்கியிருத்தல் வேண்டும். ஆக்கபூர்வமான கருத்துக்களாக இருத்தலை அவதானித்தல். மனதில் ஓர் அதிர்வினை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அமைந்திருத்தல். பைத்தியக்காரியை மையப்படுத்தியே சிறுகதை அமைந்துள்ளதால் தலைப்பு பொருத்தமாக உள்ளது.
- கதையைக் கையில் எடுத்து, ஒரு தடவையிலே வாசித்து முடிக்கக்கூடிய சிறிய அளவினதாக இருத்தல்.
- சிறுகதையொன்று மனித வாழ்க்கையின் யாதேனுமோர் அம்சத்தைக் கலைத்திறனுடன் விமர்சிப்பதாயிருக்கும். அவ்வகையில் இக்கதையும் அமைந்துள்ளது.
- கதையின் தொடக்கம், முடிவு நயம்படக் கூறப்படுதல்.
- கதை விறுவிறுப்பாக அமையும்.
- யுத்தத்தினால் ஏற்பட்ட அவலங்களை இனிவரும் எதிர்கால சந்ததியினர் அனுபவிக்கக்கூடாது என்ற செய்தியைக் கூறுகிறார்.

(40 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சிறுகதைகளை ஈடுபாட்டுடன் வாசித்து அவைபற்றிக் கருத்துக்களை முன்வைப்பார்.
- பாத்திரங்களின் குணவியல்புகளை விமர்சிப்பார்.
- கதைக்கரு தொடர்பாகக் கருத்துக்களை எடுத்துக்கூறுவார்.
- தாம் இரசித்த கதைப்பகுதிகளை பிறருக்கு எடுத்துக்கூறுவார்.
- புதுமைப்பித்தனின் கதைகளை ஆர்வத்துடன் தேடி வாசிப்பார்.

**பின்னிணைப்பு - 1**

## ஆலமரம்

அவளுடைய மூதாதைகள் அவளுக்கு என்று வைத்து விட்டுப் போனது அந்த ஆலமரம் ஒன்றைத்தான். அந்த உடைந்த சட்டி, விளிம்பில்லாத பானை, அடுப்பாக உபயோகிக்கும் மூன்று கற்கள், தென்னம்பாளை - யாவும் அவளாகத் தேடிக்கொண்டவை. அவள் அறிந்தமட்டில் அவளுக்கு இன பந்துக்கள் யாருமிருப்பதாகத் தெரியவில்லை. எலும்பினாலும், தோலினாலும் மாத்திரமே ஆக்கப்பட்டது போன்ற ஒரு நாய்தான் அவளுடைய பந்து. உயிருக்குயிரான காவலாளியுங்கூட.

காலையில் எழுந்தவுடன் தென்னம்பாளையினால் அம்மரத்தைச் சுற்றி நன்றாகச் சுத்தம் செய்வாள். அருகே இருக்கும் நீரோடைக்குச் சென்று பானையில் நீர்கொண்டு வந்து தான் கூட்டிய இடங்கட்குத் தெளிப்பாள். பின் பழைய சோறு ஏதாவது இருந்தால் தானுமுண்டு தன் நாய்க்கும் கொடுப்பாள். பொழுது நன்றாகப் புலர்ந்ததும், அந்த உலர்ந்த சட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு பிச்சைக்குப் புறப்படுவாள். போகும்போது தன் நாயை வாத்சல்யத்தோடு தடவிவிட்டுச் செல்வாள். அதுவும் தன் வாலைக் குழைத்து இருதயபூர்வமான நன்றியைக் கண்கள் மூலம் தெரிவிக்கும்.

தெருத்தெருவாக அலைவாள். மூலை முடுக்கெல்லாம் போவாள். யாராவது இரங்கி ஏதாவது உணவு கொடுத்தால், அதைப் பத்திரமாக உண்ணாமல் வைத்துக்கொள்வாள். ‘ஏன் சாப்பிடாமல் கொண்டு போகிறாய்? என்று கேட்டால் நடக்கமுடியாத ஒரு கிழவனுக்குக் கொண்டு போகிறேன்.” என்று கூறுவாள். அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு ஏங்கியிருக்கும் அந்த நாயின் அருமை அவளுக்கல்லவோ தெரியும். ஆலமரத்தடியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கந்தல்களையும் மற்றப் பொருட்களையும் பாதுகாத்துக் கொண்டிருக்கும் காவலாளி அல்லவா அது.

சுமார் இரண்டு மூன்று மணிக்குத் தன் இருப்பிடம் நோக்கி விரைந்து செல்வாள். அவளுக்கு முன்னால் அவளுடைய உள்ளம் பறந்துகொண்டிருக்கும். தூரத்தில் வரும்பொழுதே கரிய முகில் கூட்டத்தைப்போல ஆலமிலைகளின் கூட்டம் காட்சியளிக்கும். அவளுடைய உருவங் கண்ணிற்பட்டதும் தாயைக் கண்டவுடன் துள்ளிக்குதித்தோடும் பசுக் கன்றைப்போல் அந்த நாய் ஓடிச்சென்று அவளைச் சுற்றி சுற்றி வாலைக் குழைக்கும். அவளும் அன்போடு அதைத் தடவிக் கொடுப்பாள்.

ஆலமரத்தின் கீழே உட்கார்ந்ததும் அவளுடைய களைப்பெல்லாம் மாயமாய் மறைந்துவிடும். கொண்டு வந்ததை நாயோடு பகிர்ந்து உண்பாள். சிறிது நேரம் சென்றபின் பக்கத்திலுள்ள நீரோடைக்குச் சென்று குளிப்பாள். சுமார் ஆறு, ஏழு மணியளவில் அரிசி இருந்தாற் சோறாக்குவாள். இதற்கிடையில் அவளுடைய நண்பர்கள் - காகங்கள், குயில்கள் முதலியன - கா, கூ என்று ஆரவாரித்துத் தாங்கள் வந்திருப்பதை அவளுக்குத் தெரிவிப்பார்கள். எல்லோருமுறங்கிய பின் அவளும் அந்த வேரில் தன் தலையைச் சாய்ப்பாள். அந்த ஆலம்வேர்தான் அவளுடைய தலையணை. அவளுடைய குருட்டுத் தாத்தா உறங்கியதும் அதே வேரில் தலைவைத்துத்தான். சீமேந்தால் மெழுகப்பட்ட சுவரைப்போல அந்த வேர் அழுத்தமாக இருந்தது.

அன்றும் அவள் அதே வேரில்தான் தலைவைத்துக் கொண்டு நிம்மதியாகத் தூங்கினாள். அந்த நாயும் அவளின் காலடியில் தூங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு பயங்கரமான கனவு கண்டு துடித்து எழுந்தாள். வாய் என்னவோ உளறியது. மரத்தைச் சுற்றி ஒருமுறை வந்தாள். அப்பொழுதும் அவளுக்குத் திருப்தி உண்டாகவில்லை. நன்றாக ஒருமுறை அண்ணாந்து பார்த்தாள். மரம் மரமாகத்தான் இருந்தது. அது முறிந்து வீழ்ந்துவிடவில்லை. கண்டது வெறும் கனவாக இருந்தாலும் அவளுடைய உள்ளத்தில் சகிக்கமுடியாத வேதனை குடிகொண்டது. பொங்கிவரும் கண்ணீரை அடக்கினாள். ஆனால் அடக்கமுடியவில்லை. அருகே கவலை தேங்கிய முகத்தோடு நின்ற நாயை அருகிலிழுத்து அணைத்துக்கொண்டாள். அதுவும் தன்னுடைய நாவால் அவளுடைய கரத்தை நக்கியது. இரவுமுழுவதுந் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

பொழுது புலர்ந்ததும் வழக்கம்போல் சட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அவளுடைய மனம் சஞ்சலப்பட்டது. தான் கண்ட பயங்கரமான கனவை ஒருமுறை நினைத்துப் பார்த்தாள். ஒருவேளை உண்மையில் அப்படி நடந்தால்..... நினைக்கவே அவளுடல் நடுங்கியது. கால்கள் செல்ல மறுத்தன.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

எத்தனை நாட்களுக்குப் போகாமலிருக்க முடியும்? ஒருநாள் பிச்சைக்குச் செல்லாவிட்டால் அவளுடைய கதி என்ன? அவளையே நம்பிக் கொண்டிருக்கும் நாயின் கதிதான் என்ன? மனக் கலக்கத்தோடு புறப்பட்டாள். மரத்திலிருந்து இரண்டு மூன்று பனித்துளிகள் அவள்மேல் வீழ்ந்தன. அவள் அதைக் கேவலம் பனித்துளிகளாக நினைக்கவில்லை. நிராதரவாக என்னைவிட்டுப் போகிறாயா என்று அந்த ஆலமரங்கதறிப் பெருக்குங் கண்ணீர்தான் அத்துளிகள் என்று நினைத்தாள். அவள் கண்களும் நீரைச் சொரிந்தன.

அவள் பிச்சைக்குச் சென்றுவிட்டாள். ஆனால் மனம் மட்டும் நிம்மதியாயில்லை. வழக்கத்துக்கு விரோதமாகப் பன்னிரண்டு மணிக்கே இருப்பிடத்தை நோக்கி நடந்தாள். எல்லோருங் கூட்டங் கூட்டமாக நின்று எதையோபற்றி ஆனந்தத்தோடு பேசிக்கொண்டு நின்றார்கள். அதை என்னவென்றறிய அவளுக்குமாசைதான். ஆனால் அவர்களிடம் சென்று அறியக்கூடிய தகுதி அவளுக்கில்லை. அவ்வழியால் வந்த ஒரு சிறுமியிடம் விசாரித்தபொழுது, ‘எங்கள் கிராமத்திற்கு றெயில் பாதை போடப்போகிறார்களாம். இன்னுமிரண்டு, மாசத்துள் றெயில் ஓட ஆரம்பித்துவிடும் என்று அப்பா சொன்னார்’ என்றாள் சிறுமி.

றெயில் வந்தாலென்ன, ஆகாயக்கப்பல் வந்தாலென்ன? பிச்சைக்காரியாகிய அவளுக்கு இரண்டுஞ் சரிதானே? இருப்பிடத்தை நோக்கி அவள் விரைவாக நடந்தாள்.

இதென்னடா சனியன்! வேலைசெய்ய விடமாட்டேனென்கிறதே என்றானொருவன். ஆங்கில உடையில் நின்ற எஞ்சினியரின் கைத்துப்பாக்கி டுமீல்! என்ற சத்தத்தோடு வெடித்தது. இவ்வளவு நேரமும் மரத்தைச் சுற்றிச்சுற்றித் தன் எஜமானியின் பொருட்களுக்காகப் போராடிய அந்த நாய் மண்ணிற் சாய்ந்தது.

சுமார் கால் மைல் தூரத்தில் வரும்பொழுதே தென்படும் ஆலமரம் இன்று வெகு சமீபத்தில் வந்தும் அவள் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆலமரம் இருந்த இடம் ஒரேவெளியாக இருந்தது. இரவு கண்ட கனவு அவள் ஞாபகத்திற்கு வந்தது. கையிலிருந்த சட்டி தடாலென்று வீழ்ந்தது. மரத்தடியை நோக்கி ஓடினாள். அவளுடைய சாமான்கள் ஒரு பக்கத்தில் எறியப்பட்டுக் கிடந்தன. இன்னொரு பக்கத்தில் அவளுடைய நாய் உயிரற்றுக் கிடந்தது. மறுபக்கம் திரும்பினாள். மாறி மாறி விழும் கோடரிக்கொத்தைதாங்க மாட்டாமல் தவிக்கும் மரத்திலிருந்து உதிரம் பெருகுவது போலிருந்தது, அதிலிருந்து வடிந்த பால். ‘ஐயோ’ என்றலறிக்கொண்டு ஓடிப்போய் வீழ்ந்தாள். திடீரென்று ஒரு கோடரிக்கொத்து அவளுடைய தலையில் வீழ்ந்தது. எல்லோரும் திகைத்துப் போய் நின்றார்கள். வெண்ணிற ரத்தமும், செவ்விரத்தமும் கலந்து அடிமரத்தைக் கழுவிக்கொண்டன.

---

**செயற்பாட்டுப்பத்திரம்** **பின்னிணைப்பு - 2**

1. பின்வரும் பாத்திரங்களின் குணவியல்புகளைத் தருக.
   - பைத்தியக்காரி
   - இராணுவ அதிகாரி
   - வேலைக்காரி

2. புதுமைப்பித்தனின் மொழிநடைபற்றி கருத்துத் தெரிவிக்குக.
3. “பைத்தியக்காரி” சிறுகதையில் உம்மை மிகவும் பாதித்த சம்பவம் யாது? காரணம் கூறுக.
4. சிறுகதையின் முடிவு பற்றிய உமது கருத்தைத் தெரிவிக்குக.
5. “பைத்தியக்காரி” என்ற தலைப்பின் பொருத்தப்பாடு குறித்துக் கருத்துத் தெரிவிக்குக.
6. “பைத்தியக்காரி” என்ற சிறுகதையில் சிறந்த சிறுகதைக்குரிய அம்சங்கள் காணப்படுமாற்றைக் குறிப்பிடுக.
7. இக்கதையினூடாக கதாசிரியர் கூறமுற்படும் செய்தி யாது?

தேர்ச்சி: 2.0 இலக்கியங்களைக் கற்பதன் மூலம் விருத்தி செய்த மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 2.3: பாடப்பரப்பைக் கிரகித்து விடையளிப்பார்.

செயற்பாடு: நந்திக் கலம்பகத்தில் நந்திவர்மன் மறைவு தொடர்பான செய்யுளை வாசித்துக் கிரகித்து வெளிப்படுத்துவார்.

நேரம்: 80 நிமிடங்கள்

தர உள்ளீடு :
- நந்திக் கலம்பகம் பாடல் - பாடநூல்
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1
- எழுது கருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 2.3.1**

இளையவன் இறந்த பின் எவரும்என்? எனக்கு
அளவறு சீர்த்தியென்? அறிவென்? ஆண்மைஎன்?
கிளையுறு சுற்றமென்? அரசென்? கேண்மை என்?
விளைவு தானென்? மறைவிதியென்? மெய்மை என்?

- இப்பாடல் சொல்ல வந்த செய்தி என்ன?
- இப்பாடல் வெளிப்படுத்தும் உணர்வு யாது?

போன்ற வினாக்களை வினவுவதன் மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- பாடலின் பொருள்
- சொல்லாட்சி
- கையாளப்பட்டுள்ள அணி
- ஓசை, உணர்ச்சி
- விழுமியம்

(15 நிமி)

**படி 2.3.2**
- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- பாடநூலில் உள்ள நந்திக்கலம்பகப் பாடலை ஒவ்வொருவரும் வாசித்து விளங்க வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- விடையளிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

(35 நிமி)

**படி 2.3.3**
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டுப் பத்திரத்திற்கான விடைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனையோர் கருத்துரைக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.**

- நந்திவர்மனது குணவியல்பு
  கருணையின் மிகுதிப்பாடு (தயாபரன்)
  கொடையான் (கற்பகம் அடைந்த துன்பங்கள்)
- கீர்த்தி, வீரம்
  - கடலுள் புகுந்த புகழ்
  - புலியை அடைந்த வீரம்
  கடலுக்குப் புகழையும் புலிக்கு வீரத்தையும் அளித்தவன் இவன் எனக் கூறுதல்.
  (மிகைப்படுத்திக் காட்டுதல்.)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ஆட்சிச் செழிப்பு
  கொடை, அழகு
  (இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏனையவற்றிற்கும் விளக்கம் தருக.)

- இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணி உயர்வு நவிற்சி அணி. நந்திவர்மனது சிறப்புக்கள் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. அவனது முகத்தின் ஒளி நிலவிடமும் புகழ் கடலிடமும், வீரம் புலியிடமும், கொடை கற்பகத்திடமும் சேர்ந்து விட்டதாக மிகைப்படுத்திப் பாடப்பட்டுள்ளது.

- இப்பாடல் வெளிப்படுத்தும் செய்தி
- அரசர்களது கொடை, கருணை, ஆட்சி, வீரம் முதலியன.
- புலவர்களுக்கும் அரசர்களுக்கும் இருந்த தொடர்பு / அன்பு.
- புலவர் தம்மைப் போசித்த அரசர் மீது கொண்ட அன்பை, நட்பை, அவர்கள் மறைந்தபோது வெளிப்படுத்தும் தன்மை.

- இப்பாடலில் வெளிப்படுத்தப்படும் உணர்வு

  சோக உணர்வு (கையறுநிலை) வெளிப்படுத்தப்படுகிறது. நந்திவர்மன் இறந்த பின்னர், புலவர் செயலற்று வருந்திப் பாடியதாக உள்ளது. மன்னனின் பல்வேறு சிறப்புக்களையும் எண்ணி வருந்திப் பாடியுள்ளார். அருளிற் சிறந்தவன் ஈடிணையற்றவன் என்று அவனின் சிறப்பைக் குறித்துப் பாடுகின்றார். முகத்தின் ஒளி நிலவிடமும், புகழ் கடலிடமும், வீரம் புலியிடமும், புகழ் கடலிடமும் சேர்ந்து விட்டதாக இரக்கமுற்றுப் பாடுகின்றார்.

- நந்திவர்மனின் மறைவு புலவரிடம் ஏற்படுத்திய தாக்கம் 'நானும் எனது துன்பமான வறுமையும் எங்கே யாரிடம் செல்வோம்' என்பதனூடாக தனது வறுமையைப் போக்க இனி யார் உளர் என்று ஏங்குகிறார் புலவர். புலவருடைய கையறுநிலையைக் குறிப்பாக உணர்த்தும் பாடலடி 'யானும் என் கலியும் எவ்விடம் புகுவோம்?"

(30 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. இடைக்கால இலக்கியங்களைப் பற்றி அறிந்து கூறுவார்.
2. இடைக்கால இலக்கிய வடிவங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.
3. இலக்கியங்கள் குறிப்பிடும் செய்தியை விபரிப்பார்.
4. இலக்கியங்களின் வெளிப்பாட்டுத் திறன்களை இனங்கண்டு விமர்சிப்பார்.
5. இலக்கியங்கள் / பாடல்களின் ஊடாகத் தெரியவரும் செய்திகள், விழுமியங்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.
6. இலக்கியங்களை / பாடல்களை வாசிப்பதனூடாக வேறு இலக்கியங்களையும் தேடி வாசித்து நயப்பார்/ விமர்சிப்பார்.

**செயற்பாட்டுப்பத்திரம்**

- இப்பாடலில் குறிப்பிடப்படும் நந்திவர்மனது குணவியல்புகள் யாவை?
- நந்திவர்மனது கீர்த்தி, வீரம் ஆகியவற்றை விளக்கக் கையாண்ட உத்திகள் எவை?
- இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணியை எடுத்துக் காட்டுக.
- இப்பாடலில் எவ்வாறான உணர்வு வெளிப்படுத்தப்படுகிறது? அது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
- இப்பாடல் வெளிப்படுத்தும் செய்தி யாது?
- நந்திவர்மனின் மறைவு புலவரிடம் ஏற்படுத்திய தாக்கம் யாது?
- புலவருடைய கையறுநிலையைக் குறிப்பாக உணர்த்தும் பாடலடி எது?

தேர்ச்சி: 1.0 — இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 1.4: — விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

செயற்பாடு: — கம்பராமாயணம் கையடைப்படலத்திலுள்ள 10-21 வரையிலான பாடல்களைப் படித்து, விமர்சன நோக்குடன் கருத்துக்களை முன்வைப்போம்.

நேரம்: — 240 நிமிடங்கள்

தர உள்ளீடு :
- பாடநூல் (கையடைப்படலம் 10 - 21 பாடல்கள்)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- எழுது தாள்கள்
- அகராதி

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.4.1**

பின்வரும் பாடலைக் கரும்பலகையில் காட்சிப்படுத்திக் கலந்துரையாடலை ஆரம்பியுங்கள்.

> "தூய மெல் அரியணைப் பொலிந்து தோன்றினான்
> சேய் இரு விசும்பிடைத் திரியும் சாரணர்
> நாயகன் இவன் கொல்? என்று அயிர்த்து, நாட்டம் ஓர்
> ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கினார்"

- தரம் 10 இல் கற்ற கையடைப்படலம் பகுதி 1 இனை ஞாபகப்படுத்துங்கள்.

- பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கும்படி மாணவரிடம் கூறுங்கள்.
  1. தசரதனின் பெருமை இப்பாடலில் எவ்விதம் காட்டப்பட்டுள்ளது?
  2. பாடலைப் படிக்கும்போது எவ்வெவ் விடயங்களை அவதானிக்க வேண்டும்?

- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| - பாடலின் பொருள் |
| - கூறப்பட்டுள்ள விடயம் |
| - கதாபாத்திரங்கள் / அவற்றின் சிறப்பு |
| - நயத்தற்குரிய விடயங்கள் / அணிகள் / வர்ணனைகள் |
| - சொல்லாட்சி |
| - சமூகத்தோடு / உலகத்தோடு / வேறு இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் |

(20 நிமி)

**படி 1.4.2**

- மாணவர் இருவரிருவராக இணைந்து செயற்பட வழிப்படுத்துங்கள்.
- கம்பராமாயணம் - கையடைப்படலம் 10-12 வரையிலான பாடல்களை ஒருவர் மாறி ஒருவர் வாசிக்க, மற்றவர் அவதானித்துக் கேட்கும் வகையிலான பயிற்சியில் ஈடுபடச்செய்யுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பொருளுக்கேற்ப பாடல்களைப் பிரித்து வாசிக்கிறார்களா என அவதானித்து வழிப்படுத்துங்கள்.
- பின்னர் பாடல்களின் பொருளை ஒருவர் மாறி ஒருவர் வாசிக்க மற்றவர் அவதானித்துக் கேட்கச் செய்யுங்கள்.
- மாணவர் குழுவாக இயங்கிப் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்திக் கலந்துரையாட நெறிப்படுத்துங்கள்.
    1. கௌசிகன், வசிட்டன், தசரதன், இராமன், இலக்குமணன் ஆகிய பாத்திரங்களின் குணவியல்புகள்.
    2. உவமையணிகள்
    3. மொழிப்பிரயோகம்
    4. பாத்திரங்களின் பெருமையைக் கூற கையாண்ட உத்திகள் (புலவர் / பாத்திரங்கள் வாயிலாக)
    5. கம்பர் கூற முனையும் கருத்து
- கலந்துரையாடும்போது தனித்தனியே குறிப்பெடுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- குழுக்களிடையே சென்று குறிப்புக்களை அவதானியுங்கள்
- பின்னர் செயற்பாட்டுப்பத்திரத்தை மாணவர் அனைவருக்கும் வழங்கி, அதனைப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.

(140 நிமிடங்கள்)

**படி 1.4.3**

- மாணவரை எழுமாற்றாக அழைத்து விடைகளை முன்னிலைப்படுத்தும்படி அறிவுறுத்துங்கள்.
- விடைகளை முன்வைத்த பின், விடைகள் தொடர்பாக ஏனையோர் கருத்துக்கள் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

(1) அ.யாரால் :- கௌசிகனால்
யாருக்கு:- தசரதனுக்கு
எச்சந்தர்ப்பத்தில்:- தசரதன் விசுவாமித்திரரை வணங்கி தேவரீர் எழுந்தருளப் பெற்றதனால் அரசாட்சியை அடைந்ததன் பயனைப் பெற்றேன். இனி யான் செய்ய வேண்டியதை கூறியருள்வீராக எனச் சொல்லிய வேளையில் கௌசிகனால் மேற்கண்டவாறு கூறப்பட்டது.

ஆ.யாரால் :- தசரதனால்
யாருக்கு:- கௌசிகனுக்கு / விசுவாமித்திர முனிவனுக்கு
எச்சந்தர்ப்பத்தில்:- இராமனை யாகத்தைக் காக்க அனுப்புவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி வசிட்டர் கூறியதற்கு இணங்கிய தசரதன் இராமனை விசுவாமித்திரரிடம் ஒப்படைத்த வேளையில் மேற்கண்டவாறு கூறப்பட்டது.

(2) தசரதனின் சிறப்புக்கள்

**கவிக்கூற்று**

- பேரிகை முழங்கும் தலைவாயிலை உடையவன்.
- முனிவர்களைப் போற்றுபவன் - விசுவாமித்திரரைக் கண்டதும் அளவில்லா மகிழ்ச்சி கொண்டு, கரங்கூப்பி வணங்கி அரசாட்சியின் பயனைப் பெற்றேன் எனக்கூறி பெருமையடைதல்.

**உவமைகள்**

இராமனை யாகம் காக்க அனுப்புவதற்கு விரும்பாமை.

- வேலாயுதம் பாய்ந்த புண்ணிலே கொள்ளிக்கட்டை நுழைந்ததுபோல துன்புற்றான்.
- பிறவிக் குருடன் கண்களைப் பெற்று மீண்டும் இழந்தது போல வருந்தினான்.

- தசரதனது செயல்கள்
  - இராமனுக்குப் பதிலாக வேள்வி காப்பதாக தசரதன் விசுவாமித்திரருக்குக் கூறுதல்.
  - குருவினது வார்த்தைக்குக் கட்டுப்பட்டு இராமனை வேள்வி காக்க அனுப்புதல்.

(3) அ. கௌசிக முனிவன் (விசுவாமித்திரன்)

- எண்ணிலா அருந்தவத்தோன்
- தன் கருமமே கண்ணாயிருத்தல்
- தசரதன் இராமனை அனுப்ப மறுத்ததும் கடுஞ்சினமடைதல்.
  (கோபத்தினை அறிந்த இமையோரும் சூரியனும் அடைந்த பதற்றம்)
  இதனூடாக அவரது கோபத்தின் உக்கிரம் வெளிப்படல்.
- பின்னர், தசரதன் இராமனை அனுப்ப ஒப்புக்கொண்டதும்
  சினம் தணிதல், தசரதனை வாழ்த்தல்.

ஆ. வசிட்டன்

தசரதனின் குலகுரு, விசுவாமித்திரனின் சினத்தின் தன்மையை அறிந்தவராதலால், அவரைச் சினங்கொள்ள வேண்டாமெனத் தடுத்தல். புத்திக்கூர்மையால் கௌசிகனது கோபத்தைத் தணித்தல். இராமனுக்கு நன்மைகள் பல வந்து சேரும் காலத்தில் கௌசிகன் அழைப்பதைத் தடுக்கக் கூடாது என தசரதனுக்கு அறிவுரை கூறுதல்.

இ. தசரதன்

மூத்த புதல்வனான இராமன் மீது அளவு கடந்த பாசமுடையவனாக இருத்தல். (கௌசிக முனிவரது வேண்டுகோளை மறுத்தல்) தான் செய்யும் யாகத்திற்கு இடையூறு வராது காக்க இராமனை அனுப்பும்படி கேட்டதும் மிகுந்த துன்பமடைதல். (கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்) வசிட்டன் இராமனுக்கு நன்மை ஏற்பட இருக்கும்போது தடுக்கக் கூடாது என அறிவுரை கூறியபோது ஏற்று அனுப்பல். (குருவுக்கு மதிப்பளித்தல்) கௌசிகனிடம் மனமுவந்து மக்களைக் கையடை செய்தல்.

ஈ. இராமனும் இலக்குமணனும்

தந்தையின் சொல்லுக்கு மதிப்பளித்துக் கௌசிகன் பின்னே செல்லல்.
திருவின் கேள்வன் - தசரதன் கூற்று
கரிய செம்மல் - கௌசிகன் கூற்று
உலகம் தாங்கினான் - கம்பன் கூற்று

I. பாடல் 12 - அருந் தவத்தோன் இயம்பிய சொல் மருமத்தின்
எறிவேல் பாய்ந்த புண்ணில் ஆம்பெரும்
புழையில் கனல் நுழைந்தாலென

இராமனை அனுப்பும்படி கௌசிகன் கூறிய வார்த்தை தசரதனுக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்தது. அத்துன்பம், வேலாயுதத்தால் ஏற்பட்ட புண்ணில் நெருப்பு நுழைவது போல இருந்தது எனக் கூறப்பட்டது.

உவமானம் : வேலாயுதத்தால் ஏற்பட்ட புண்ணில் நெருப்பு நுழைதல்.
உவமேயம் : கௌசிகன் இராமனைத் தன்னுடன் அனுப்பும்படி கூறிய வார்த்தை காதில் நுழைதல்.
பொதுத்தன்மை: துயரம்
கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

உவமானம் : கண் இல்லாதவன் கண்ணைப் பெற்று மீண்டும் இழத்தல்.
உவமேயம் : குழந்தைச் செல்வம் இல்லாதிருந்து, பின்னர் பெற்றெடுத்த இராமனைக் கௌசிகனுடன் அனுப்புவதை நினைந்து அடைந்த துயரம்.
பொதுத்தன்மை: அளவிட முடியாத துன்பம்

II. பாடல் 16 - பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய் கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்

உவமானம் : பெருவெள்ளம் கடலிலே போய்ச்சேர்தல்.
உவமேயம் : அளவில்லாத வித்தைகள் இராமனிடம் வந்து சேர்தல்.
பொதுத்தன்மை : நற்பயன் கிட்டுதல்

III. பாடல் 20 - இரு குன்றம் போன்று உயர் தோளில்

உவமானம் : இருகுன்றுகள்
உவமேயம் : இராமனது இரு தோள்கள்
பொதுத்தன்மை : தோற்றப்பொலிவு

IV. சொன்ன மாதவன் சாயை போல் தொடர்ந்து

உவமானம் : நிழல் ஒருவரைப் பின்தொடர்ந்து செல்லல்.
உவமேயம் : இராம இலட்சுமணர் கௌசிகனைப் பின்தொடர்ந்து செல்லல்.
பொதுத்தன்மை : பிரிக்க முடியாத நிலை

(5) கௌசிக முனிவனின் தவவலிமை, அவரது சீற்றத்தின் தன்மை.
இராமன் மீது தசரதர் கொண்ட அளவு கடந்த பாசம்.
குலகுருவான வசிட்டனின் சமயோசித புத்தி.
இராமனுக்குக் கிடைக்கவிருக்கும் பெருமை.
தந்தை சொல் தட்டாத இராமனது சிறப்பு.

(6) தசரதன் மீது கொண்ட பாசம்

விசுவாமித்திரர் வேள்வியைக் காப்பதற்காக இராமனைத் தரும்படி கேட்ட வேளையில் தசரதன் அடைந்த துயரம்:-
உவமைகள் மூலம் விளக்கப்படுகிறது.

1. வேலாயுதம் பாய்ந்த புண்ணிலே கொள்ளிக்கட்டை நுழைந்தது போல துன்புற்றான்.
2. அரிய உயிர் ஊஞ்சலாடுவது போல ஊசலாடியது.
3. பிறவிக் குருடன் கண்களைப் பெற்று மீண்டும் இழந்தது போல வருந்தினான்.

- இராமனை விசுவாமித்திரருடன் அனுப்ப விரும்பாத தசரதன், தான் வேள்வி காக்க வருவதாகக் கூறுகிறான்.
- இராமனை விசுவாமித்திரரிடம் ஒப்படைக்கும்போது தலைவனே! இவ்விளங்குமாரருக்கு நல்ல தந்தையும் நீயே, ஒப்பற்ற தாயும் நீயே, உன்னிடம் ஒப்பித்தேன். ஆகவேண்டிய அநுகூலங்களைச் செய்தருள்வாயாக என்று தசரதன் கூறுவதினூடாக பாசம் வெளிப்படுகிறது.

- இராமன் இளம்பிராயமுடையவன், ஆயுதத் தேர்ச்சி இல்லாதவன் என்று கூறுவதினூடாக இராமனை விட்டுப் பிரிய மனமில்லாத நிலை கூறப்படுகிறது.
- இராமனுக்கு அளவில்லாத நன்மைகள் கிடைக்கும் என்று வசிட்டன் கூறியதிற்கிணங்க இராமனை அனுப்ப இணங்குகிறான் - இராமனின் மேன்மையில் தசரதன் கொண்ட அக்கறை காட்டப்படுகிறது.

(7) பாடலடியின் சிறப்பு

(அ) சிவபிரானின் தோற்றச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. கங்கா நதியை சடாமுடியில் சூடியுள்ளவன் என சிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) விசுவாமித்திரரின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. தவங்களில் மேலோங்கியவர், தவ வலிமை மிக்கவர் என சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

(80 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாடல்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- ஏனையவர்களுடன் கலந்துரையாடி, பாடல்களிலே காணப்படும் சிறப்புக்களை விமர்சிப்பார்.
- பாத்திரங்களின் குணவியல்புகளை விபரிப்பார்.
- உவமையணிகளை இனங்கண்டு விளக்குவார்.
- குழுவாக இயங்கி பாத்திரமேற்று நடிப்பார்.
- பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பாடல்களை வாசித்து, நயந்தவற்றை விமர்சிப்பார்.

---

**பின்னிணைப்பு - 1**

**செயற்பாட்டுப் பத்திரம்**

I. ஏற்கெனவே குழுவாக இயங்கி எடுத்த குறிப்புகள் மூலமும் பன்னிரண்டு பாடல்களையும் (10-21) மீண்டுமொருமுறை படிப்பதன் மூலமும் பின்வரும் வினாக்களுக்கு விடையெழுதுங்கள்.

1. பின்வரும் கூற்றுக்கள் (அ) யாரால் (ஆ) யாருக்கு (இ) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டன?
   (i) “நின்சிறுவர் நால்வரிலும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி.”
   (ii) நல் தந்தை நீ தனித் தாயும் நீ. நீ இவர்க்கு எந்தை! தந்தனன் இயைந்த செய்க.”

2. தசரதனின் சிறப்பு எவ்வெவ்விதங்களில் எடுத்துரைக்கப்படுகின்றது?

3. பின்வரும் கதாபத்திரங்களின் குணவியல்புகளை விமர்சிக்குக.
   அ. கௌசிக முனிவன் (விசுவாமித்திரன்)
   ஆ. வசிட்டன்
   இ. தசரதன்
   ஈ. இராமன், இலக்குமணன்

4. கம்பர் கையாண்ட உவமையணிகளை விளக்குக.
5. 10-21 வரையிலான பாடல்கள் மூலம் கம்பர் எடுத்துக்கூறும் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.
6. தசரதன் இராமன் மீது கொண்ட பாசம் சித்திரிக்கப்படுமாற்றினை வெளிப்படுத்துக.
7. பின்வரும் பாடலடிகள் ஒவ்வொன்றினதும் சிறப்பினை ஆராய்க.
   ‘பனிநீர்க்கங்கை புடையூற்றும் சடையான்’
   ‘அருந்தவத்தோன் இயம்பிய சொல்’

**ஒப்படை**

- கம்பராமாயணம் - கையடைப்படலம் 01-21வரையிலான பாடல்களில் இடம்பெறும் சம்பவங்களை நாடகவடிவில் எழுதுக.
  கதாபாத்திரங்கள் : தசரதன், தேவர்கள், கௌசிகன், வசிட்டர், ஏவலாளர், இராமன், இலக்குமணன், குழுவாக இணைந்து நடித்துப் பழகுக.
- இந்நாடகத்தை மேடையேற்றுக.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | |
|---|---|
| தேர்ச்சி: 3.0 | பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதனூடாக இலக்கியத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். |
| தேர்ச்சி மட்டம் 3.1: | பல்வேறு வகைப்பட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார். |
| செயற்பாடு: | 'நாவலர் இருவர்' எனும் கட்டுரையை வாசித்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| நேரம்: | 160 நிமிடங்கள் |
| தர உள்ளீடு : | • பாடநூல்<br>• செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1<br>• எழுது கருவிகள் |

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 3.1.1**

தரம் 10 இல் கற்ற 'கங்கை வேடனும் காளத்தி வேடனும்' எனும் கட்டுரையை ஞாபகப்படுத்துங்கள்.
பின்வரும் வினாக்களை வினவுங்கள்.

- கங்கை வேடனாகிய குகனும், காளத்தி வேடனாகிய கண்ணப்பனும் எவ்வெவ் வகையில் ஒன்றுபடுகின்றார்கள்?
- இருவரையும் ஒப்பிட்டுக் கூறுவதற்குக் கட்டுரையாசிரியர் கையாண்டுள்ள உத்திகள் யாவை?
- ஒரு கட்டுரையை வாசிக்கும்போது எவ்வெவ் விடயங்களை அவதானிக்க வேண்டும்?

போன்ற வினாக்களை வினவி, பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- கட்டுரையின் கருப்பொருள்
- கட்டுரையாசிரியர் கையாண்டுள்ள உத்திகள்
- கட்டுரையின் வகை
- மொழியாட்சி

(20 நிமி)

**படி 3.1.2**

- மாணவர்கள் சோடிசோடியாக இணைந்து கட்டுரையை வாசித்துக் குறிப்பெடுக்க வழிப்படுத்துங்கள்.
- தேவையேற்படின் கட்டுரை தொடர்பாக விளக்கம் கொடுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கி, அதனைப் பூரணப்படுத்த வழிகாட்டுங்கள்.

(80 நிமி)

**படி 3.1.3**

- மாணவர்களை வகுப்பு நிலையில் அமரச் செய்யுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை அழைத்து, ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- ஆறுமுகநாவலர் பற்றி இருவரும், விபுலானந்தர் பற்றி இருவரும் சொற்பொழிவாற்றுமாறு கூறுங்கள்.
- முன்வைத்த விடயங்கள் தொடர்பாக ஏனையவருடன் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடும்போது பின்வரும் அம்சங்களைத் தெளிவுறுத்துங்கள்.

1. அட்டவணைகளைச் சரியாக பூரணப்படுத்தியுள்ளார்களா என அவதானித்தல்.
2. நாவலர்கள் எனப்பட்டமைக்கான காரணங்கள்
   - இயற்பெயர்களின் பொருத்தம் / ஒருமைப்பாடு
   - நாவன்மை
   - பணிகள் (சமய / சமூக)

- இருவரினதும் நூல்கள் குறிப்பிடப்படல்.
- இருவரினதும் கல்விப் பணிகள் விளக்கப்படல்.
  உதாரணம் : தாய்மொழிக் கல்வி
  பாடத்திட்டத்தில் திருத்தம்
- இருவரினதும் இலக்கியப் பணிகள்
- கட்டுரை தொடர்பான கருத்துக்கள் ஆக்கபூர்வமாக இருத்தலை அவதானித்தல்.
- சொற்பொழிவாற்றும் திறனை மதிப்பிடல்.

- • இருவர் பெயரும் அறிவுத் தெய்வமாகிய முருகன் பெயராக அமைந்தள்ளமை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்க்கல்லூரி மண்டபத்தை இருவரது திருவுருவப் படமும் அலங்கரித்தல்.
- இருவரும் கிறிஸ்தவக் கல்லூரிகளில் ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள்.
- இருவரும் கல்விப் பணி ஆற்றல்.
- சமயப் பணிபுரிதல்.
- இருவரது கல்வித் தகைமைகளும் அவர்கள் காலச் சூழலுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவை.
- தமிழ்க் கல்விக்குத் தொண்டு புரிதல்.
- கல்விச் சாலைகள் நிறுவுதல்.
- நாவலர் பணியால் விபுலானந்தர் கவர்ந்து ஈர்க்கப்படல்.

(60 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- ஒப்பியல் நோக்கிலமைந்த கட்டுரைகளை வாசித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.
- கட்டுரையாசிரியர் ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொண்ட விடயங்களை விளக்கிக் கூறுவார்.
- கட்டுரைகள் வாயிலாக தாம் அறிந்துகொண்ட விடயங்களை சொற்பொழிவு முதலான வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவார்.
- கட்டுரைகளை வாசித்து விமர்சிப்பார்.

---

பின்னிணைப்பு 1

**செயற்பாட்டுப்பத்திரம்**

- முதலாவது பந்தியை வாசித்து, அதிலுள்ள முக்கிய விடயங்கள் பற்றிக் குறித்துக் கொள்ளுங்கள். தேவையேற்படின், உங்கள் சோடியுடன் கலந்துரையாடுங்கள்.
- இவ்வாறே ஏனைய பந்திகளையும் வாசித்துக் கிரகித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.
- குறிப்புக்களின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

1.

| விடயம் | ஆறுமுகநாவலர் | விபுலானந்தர் |
|---|---|---|
| • பிறப்பிடம் | | |
| • இயற்பெயர் | | |
| • கற்ற பாடசாலைகள் | | |
| • வாழ்க்கைக் கட்டங்கள் | | |
| • கல்விப் பின்னணி | | |
| • தொழில் | | |
| • சமயப் பணிகள் | | |
| • சமூகப் பணிகள் | | |

2. ஆறுமுகநாவலர், விபுலானந்தர் ஆகியோர் ஆக்கிய படைப்புக்களை அட்டவணைப்படுத்துங்கள்.

| படைப்பு | ஆறுமுகநாவலர் | விபுலாநந்தர் |
|---|---|---|
| எழுதிய நூல்கள் | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |
| மொழிபெயர்ப்பு நூல்கள் | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |
| பதிப்பித்த நூல்கள் | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |
| உரை எழுதிய நூல்கள் | 1.<br>2.<br>3. | 1.<br>2.<br>3. |

3. ஆறுமுகநாவலரும் விபுலானந்தரும் "நாவலர்கள்" எனப்பட்டமைக்கான காரணங்கள் யாவை?

4. இக் கட்டுரையாசிரியருடைய ஒப்புநோக்கும் திறனை உதாரணங்களுடன் விளக்குக.

5. குழுநிலையில் ஆறுமுக நாவலர், விபுலானந்தர் ஆகியோர் பற்றிய விடயங்களைத் தொகுத்து சொற்பொழிவாக நிகழ்த்திக் காட்டுக.

இரு குழுக்கள் ஆறுமுக நாவலர் பற்றியும் மற்றைய இரு குழுக்கள் விபுலானந்தர் பற்றியும் சொற்பொழிவாற்ற தயாராக வேண்டும்.

தேர்ச்சி: 4.0 — இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 4.1: — இலக்கியங்களினூடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவோம்.

செயற்பாடு: — ஆற்றுநர்க்கு அளிப்போர் எனத் தொடங்கும் மணிமேகலைச் செய்யுட்பகுதியை வாசித்து நயந்து அதன் சிறப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவோம்.

நேரம்: — 120 நிமிடங்கள்

தர உள்ளீடு :
- மணிமேகலை வாசிப்பு பகுதி - பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப் பத்திரங்கள் - பின்னிணைப்பு 2
- எழுது கருவிகள்
- எழுது தாள்கள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 4.1.1

பின்வரும் பாடலைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட<br>
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்.<br>
பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்<br>
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்<br>
இதயமெல்லாம் அன்பு நதியினில் நனைப்போம்<br>
<u>'இது எனது' என்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்</u><br>
<u>'ஒரு பொருள் தனி' எனும் மனிதரைச் சிரிப்போம்</u><br>
<u>இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்</u><br>
<u>ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்</u>.

- இப்பாடலை இசையுடன் பாடுவதற்குத் தூண்டுங்கள்.
  1. இப்பாடலைப் பாடியவர் யார்?
  2. இப்பாடலில் இழையோடும் நற்பண்புகள் எவை?
  3. அடிக்கோடிட்ட பகுதியினை படிக்கும்போது ஏற்படும் உணர்வு யாது?
  4. எவற்றை ஆசிரியர் வெறுக்கிறார், ஏன்?

  போன்ற வினாக்களை மாணவரிடம் வினவிக் கலந்துரையாடுங்கள்.

- அவ்வாறு கலந்துரையாடும்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

| |
|---|
| • இலக்கியங்கள் வாழ்வைச் செம்மைப்படுத்துதல்.<br>• இலக்கியங்கள் கூறும் அறக் கருத்துக்கள்.<br>• இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் அம்சங்கள்.<br>• கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு கையாளப்பட்ட உத்திகள்.<br>• மொழிநடை<br>• இலக்கிய நயம்<br>• அருஞ்சொற்கள் |

(20 நிமி)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 4.1.2

- மாணவர்களை சோடிசோடியாகப் பிரியுங்கள்.
- அனைவருக்கும் மணிமேகலை பற்றிய உரைப் பகுதியினை (பின்னிணைப்பு 1) வழங்குங்கள்.
- உரைப்பகுதியினை வாசித்து, கருத்துக்களை குறிப்பெடுப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரம் I இனை மாணவர் அனைவருக்கும் வழங்கி அறிவுறுத்தலின்படி செயற்படுமாறு வழிப்படுத்துங்கள்.

(20 நிமி)

படி 4.1.3

- மாணவர்களை வகுப்பு நிலைக்கு கொண்டு வாருங்கள்.
- ஒவ்வொரு சோடியும் விடைகளைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- விடைகள் தொடர்பாக எல்லா மாணவரும் கருத்துக்கள் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடைகளின் பொருத்தப்பாட்டினை அறிந்து பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- சிலப்பதிகாரம் - மணிமேகலை
- சீத்தலைச் சாத்தனார்
- கோவலனின் குலதெய்வம் மணிமேகலை என்பதால்.
- கோமுகிப் பொய்கை, அட்சய பாத்திரம் - வற்றாத சோற்றுவளம் உடையது. (எடுக்க எடுக்கக் குறையாதது)
- உலகத்து உயிர்களுக்கு உணவு கொடுத்தல்.

(20 நிமி)

படி 4.1.4

- மாணவர்களை மீண்டும் சோடிகளாக்குங்கள்.
- அச்சோடிகளுக்கு மணிமேகலைச் செய்யுட் பகுதியினை வழங்குங்கள்.
- செய்யுளினை வாசித்து விளங்குவதற்கும், அருஞ்சொற்களை இனங்காண்பதற்கும் பொருள் அறிவதற்கும் உதவுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரம் II இனை வழங்கி விடையளிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

(40 நிமி)

படி 4.1.5

- மாணவர்களை வகுப்பு நிலைக்கு மாற்றுங்கள்.
- விடைகளைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- விடைகள் தொடர்பாக மாணவர் கருத்துக்கூற இடமளியுங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயப் பொருத்தப்பாட்டினை இனங்கண்டு பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- கைம்மாறு செய்ய வசதி இல்லாதோருக்கு / இயலாதோருக்கு பசிபோக்குவதே நல்லறமாகும்.
  (வசதியானோருக்கு உதவுபவர்கள் அறத்தை விலை பேசுவர்.)
- அவ்வாறு அறம் செய்பவர் வாழ்க்கையே உண்மையான வாழ்க்கையாகும்.
- உலகில் உள்ள மனிதர் அனைவருக்கும் உணவு அளித்தோர், அவர்களுக்கு உயிர் அளித்தோராவர்.
- யாரால்:- தீவதிலகையால், யாருக்கு:- மணிமேகலைக்கு கோமுகிப்பொய்கையில் அட்சயபாத்திரமான அமுதசுரபி கிடைக்கப் பெற்ற வேளையில் மேற்கண்டவாறு கூறப்பட்டது.
- உலக மக்கள் துன்பம் தீர்க்க உதவி செய்தலே உலகில் நல்லறமாகும்.

- **அருஞ்சொற்கள்**

  ஆற்றுநர்:- சக்தி உடையவர் / செயல்புரிபவர்.
  பகர்வோர்:- விற்பவர் / கூறுபவர்.
  ஆற்றா மக்கள்:- சக்தி அற்றவர் / வலிமையற்றவர்.
  மண்திணிஞாலம்:- மண்செறிந்த பூமி.
  உண்டி:- உணவு.
  உரவோய்:- உறுதியுடையவர்.
  கயக்கறு:- கலக்கமற்ற

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

1. மணிமேகலை என்ற காப்பியம் தொடர்பான முக்கிய விடயங்களை அறிந்து கூறுவார்.
2. மணிமேகலை என்ற பாத்திரத்தின் அறப்பணிகள் பற்றி அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.
3. செய்யுட் பகுதியின் பொருளினை அறிந்து இலகுநடையில் உரை எழுதுவார்.
4. செய்யுள் கூறும் பிரதான ஒழுக்க விழுமியத்தை அறிந்து முன்வைப்பார்.
5. செய்யுள் கூறும் அறக்கருத்துக்களை விளங்கிக் கூறுவார்.

---

**பின்னிணைப்பு - 1**

## மணிமேகலை

1. தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனக் கூறப்படுகின்றன. இவற்றில் மணிமேகலை மதுரையைச் சேர்ந்த கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவரால் இயற்றப்பட்டது.

   கோவலனுக்கும் ஆடல் மடந்தையான மாதவிக்கும் மகளாகப் பிறந்த பெண்ணே மணிமேகலையாவாள். கோவலன் தனது குலதெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயரையே தனது மகளுக்கும் இட்டு அழைத்தான்.

   சங்கமருவிய காலத்திலே தோன்றிய இக்காப்பியம் பௌத்த நெறியின் பாற்பட்ட அற ஒழுக்கங்கள் பலவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. அவ்வறங்கள் யாவற்றிற்கும் தலையாய அறமாக உண்டி கொடுத்து உயிர்காப்பது அமைகிறது. காப்பிய நாயகி தமது இளமைக் காலத்திலேயே துறவு வாழ்க்கை மேற்கொண்டு அறப்பணியினை விரும்பிச் செய்கின்றாள். அவளது தவ ஒழுக்கம், பௌத்த நெறியில் செல்லும் ஆர்வம் என்பன காரணமாக கோமுகிப் பொய்கையில் கிடைத்த அட்சய பாத்திரமான அமுதசுரபியினைக் கொண்டு (வற்றாத சோற்று வளத்தினால்) பசித்தோரின் பசிப்பிணி போக்கிய அறத்தின் சிறப்பினை இப்பாடலில் ஆசிரியர் தீவதிலகை வாயிலாக உணர்த்துகிறார்.

- தீவதிலகை: மணிமேகலை கோமுகிப் பொய்கையில் அட்சய பாத்திரம் பெற்றபோது அது தொடர்பான, பல்வேறு தகவல்களைக் கூறிய பௌத்த துறவி.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப்பத்திரம் - I

- தனிநிலையில் விடையளிக்கவும்.
- மணிமேகலை பற்றிய உரைப்பகுதியினை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இரட்டைக் காப்பியங்கள் எவை?
2. மணிமேகலையின் ஆசிரியர் யார்?
3. கோவலன் தனது மகளுக்கு 'மணிமேகலை' எனப் பெயரிட்டமைக்கான காரணம் என்ன?
4. அமுதசுரபி எப்பொய்கையில் கிடைத்தது? அதன் சிறப்பு யாது?
5. அறங்களுள் சிறந்த அறம் எதுவென மணிமேகலை என்ற காப்பியம் கூறுகின்றது?

---

## செயற்பாட்டுப்பத்திரம் - II

- சோடிகளாகக் கலந்துரையாடி தனிநிலையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

1. 'நல்லறம் காண்பாய்' என்ற தலைப்பினைக் கொண்ட பாடலின் பிரதான கருத்தினைக் கூறுக.
2. நல்லறம் என்று இங்கு சிறப்பித்துக் கூறப்படுவது யாது?
3. அதனை விரும்பிச் செய்வோரின் சிறப்பு எவ்வாறு எடுத்துக்கூறப்படுகின்றது?
4. 'உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக் கயக்கறு நல்லறமே கண்டனன்' இக்கூற்றுயாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்திலே கூறப்பட்டது?
5. இப்பாடலில் கூறப்படும் மானுட விழுமியம் பற்றி யாது கூறுவீர்?
6. பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக.
   i. ஆற்றுநர்
   ii. பகர்வோர்
   iii. ஆற்றாமக்கள்
   vi. மண்திணி ஞாலம்
   v. உண்டி
   vi. உரவோய்
   vii. கயக்கறு

| | |
|---|---|
| தேர்ச்சி: 4.0 | இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 4.1: | இலக்கியங்களினூடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார். |
| செயற்பாடு: | 'ஒழுக்கமுடைமை' என்ற அதிகாரத்தில் உள்ள குறட்பாக்களின் கருத்துக்களைக் கூறுவோம். |
| நேரம்: | 200 நிமிடங்கள் |
| தர உள்ளீடு : | • பாடநூல் (திருக்குறள் - ஒழுக்கமுடைமை)<br>• செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1<br>• எழுதுதாள்கள் |

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 4.1.1**

பின்வரும் பாடலைக் காட்சிப்படுத்துங்கள்.

**நாலுகோடி**

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்.
உண்ணீர் உண்ணீர் என்றே ஊட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி யுறும்.
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்.
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடை நாக்
கோடாமை கோடி யுறும்.

- ஔவையார் -

- பாடலை உரத்து வாசியுங்கள்.
- மாணவர்களை உரத்து வாசிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் வினாக்களை வினவுங்கள்.
  1. பாடலின் பொருள் என்ன?
  2. புலவர் தமது கருத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
  3. ஒரு பாடலை வாசிக்கும்போது எவ்வெவ் விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டும்?

  போன்ற வினாக்களை வினவி பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| பாடலின் பொருள் |
| கையாண்ட உத்திகள் |
| அறக்கருத்துக்கள் |
| மானுட விழுமியங்கள் |
| படிப்பினைகள் |

(20 நிமி)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**படி 4.1.2**

- திருக்குறள் ‘ஒழுக்கமுடைமை’ என்ற அதிகாரத்தின் குறட்பாக்களை ஒவ்வொரு மாணவரும் சந்தி பிரித்து வாசித்துப் பொருளறிய வழிப்படுத்துங்கள்.
- மாணவர் அனைவருக்கும் செயற்பாட்டுப்பத்திரம் 1 இனை வழங்குங்கள்.
- தனித்தனியே செயற்பாட்டுப்பத்திரத்தைப் பூர்த்தி செய்ய வழிகாட்டுங்கள்.

(60 நிமி)

**படி 4.1.3**

- எழுமாற்றாக மாணவர்களை அழைத்து, செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்க அறிவுறுத்துங்கள்.
- முன்வைத்த விடைகள் தொடர்பாக, ஏனைய மாணவர்களும் கருத்துக்கள் வழங்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயப் பொருத்தப்பாட்டினை அறிந்து பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- **ஒழுக்கமுடைமையின் சிறப்பு:**
  - ஒழுக்கமானது உயர்வினைத் தரும். எனவே அது உயிரைவிடவும் மேலானதாகப் போற்றப்படும்.
  - ஒழுக்கத்தினை எவற்றாலும் அழிவுபடாமல் பேணிக் காக்க வேண்டும். ஒழுக்கம் இருமைக்கும் துணையாதல்.

- **நன்மைகள்:**
  - ஒழுக்கமுடையவரின் குடிப்பிறப்பு உயர்ந்ததாக கருதப்படல்.
  - நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாக அமைதல்.
  - ஒழுக்கமுடையவர் மேன்மையடைவர்.
  - நன்றிக்கு வித்தாகும்.

- **ஒழுக்கக்கேட்டினால் ஏற்படும் தீமைகள்:**

  ஒழுக்கம் இல்லாதவனின் பிறப்பு இழிந்த பிறப்பாகும்.
  ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.
  ஒழுக்கம் தவறினால் பெரியோரும் இழிகுலத்தவராகக் கருதப்படுவர்.
  ஒழுக்கம் தவறுதலால் பெரும் பழி உண்டாகும்.
  தீய ஒழுக்கமானது துன்பத்தை விளைவிக்கும்.
  ஒழுக்கம் இல்லாதவர் பலதைக் கற்றாலும் கல்லாதவரேயாவர்.

- **கையாளப்பட்ட உவமைகள்:**

  “அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை
  ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு”
  இங்கு பொறாமை உள்ளவனிடம் செல்வம் இல்லாமையானது ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்வு இல்லாமைக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

- **குறட்பாக்களின் பொருள்**

  i. பொறாமை உள்ளவனிடத்துச் செல்வம் இருப்பதில்லை. அதேபோன்று ஒழுக்கம் இல்லாதவனிடத்து உயர்வு இருக்காது.
  ii. நல்லொழுக்கமானது அறத்திற்குக் காரணமாக அமையும். தீய ஒழுக்கமானது என்றும் துன்பத்தையே விளைவிக்கும்.

**பொருட் சிறப்பு**

i. ஒழுக்கம் உயிரைவிட மேன்மையானது என்று எடுத்துக்காட்டுவதனூடாக, ஒழுக்கத்தின் சிறப்புக் காட்டப்படுகின்றது.

ii. அந்தணருக்குச் சிறப்புத் தருவது வேதம் ஓதுதல் ஆயினும் அதனை அவர் அதனை மறத்தல் கூடும். அது குற்றமாகாது. ஆனால் ஒருவர் ஒழுக்கத்தினை மறந்தால் அவரது குடிப்பிறப்பே இழிந்ததாகிவிடும்.

(40 நிமி)

**படி 4.1.4**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரம் இரண்டில் உள்ள விடயங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- குழுவாகக் கலந்துரையாடி, செயற்பாட்டினைப் பூரணப்படுத்த உதவுங்கள்.

(40 நிமி)

**படி 4.1.5**

- ஒவ்வொரு குழுவும் அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்கள் வழங்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்களைத் தெளிவுறுத்துங்கள்.

**சொற்பொழிவு**

பொருள்: ஒழுக்கம் விழுப்பம் தரும்

சொற்பொழிவுக்கேற்ற உத்திகளைக் கையாளல்

**கதை**

கரு: ஒழுக்கம் தவறினால் துன்பம் ஏற்படும்.

ஆரம்பம்: ஆர்வமூட்டும் வகையில் அமைதல்.

முடிவு: படிப்பினையூட்டுவதாக அமைதல்.

**உரையாடல்**

பொருள்: உலகத்தோடு ஒட்ட ஒழுகல்.

உரையாடல் வடிவம் பேணப்பட்டிருத்தல்.

பொருளுடன் பொருந்தக்கூடிய உரையாடல்.

தர்க்க ரீதியாக கூறவந்த கருத்தை முதன்மைப்படுத்தல்.

உதாரணம்:- உதாரணம் கூறல், கருத்தை மறுத்தல், அனுசரித்தல், ஆதரித்தல், தம் கருத்து நிறுவுதல்.

**கட்டுரை**

தலைப்பு: உயிரினும் மேலானது ஒழுக்கம்

தலைப்புக்கேற்ற பொருளடக்கம் - எடுப்பு, தொடுப்பு, முடிப்பு, தொடர்புறுத்தல், மொழிச் செம்மை, பந்தியமைப்பு, துணைக்கருத்துக்கள் தருதல்.

(40 நிமி)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- செய்யுட்பகுதியின் பிரதான கருத்துக்களை வகுத்தும் தொகுத்தும் எழுதுவார்.
- பிரதான விடயங்களை விபரிக்க, புலவர் எடுத்தாண்ட அணிகள் பற்றி விளக்குவார்.
- பாடற்பகுதிகள் வலியுறுத்தும் விழுமியக் கருத்துக்களைத் தெரிந்து கூறுவார்.
- பாடற்பகுதிகளின் பிரதான கருத்துக்களைத் தொகுத்து, திறனுக்கேற்ப வேறு வடிவங்களில் முன்வைப்பார்.

---

**பின்னிணைப்பு - 1**

## செயற்பாட்டுப்பத்திரம் - 1

- ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் உள்ள குறட்பாக்களை சந்திபிரித்து வாசியுங்கள்.
- குறட்பாக்களின் பொருளை வாசித்தறியுங்கள்.

பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

1. ஒழுக்கமுடைமையின் சிறப்பினை விளக்குக.
2. ஒழுக்கமுடையார் அடையும் நன்மைகள் யாவை?
3. ஒழுக்கக் கேட்டினால் ஏற்படும் தீமைகள் எவை?
4. இவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள உவமை யாது?
5. பின்வரும் குறட்பாக்களின் பொருளை எழுதுக.
    i. ‘அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை

       ஒழுக்கம் இலான் கண் உயர்வு.’
    ii. ‘நன்றிக்கு வித்தாகும் நல் ஒழுக்கம், தீயொழுக்கம்
       என்றும் இடும்பை தரும்.’

6. பின்வரும் குறட்பாக்களின் பொருட்சிறப்பை விளக்குக.
    i. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
       உயிரினும் ஓம்பப்படும்.
    ii. மறப்பினும் ஒத்துக்கொளலாகும். பார்ப்பான்
       பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்.

7. குறட்பாக்களை ஓதுக.

---

## செயற்பாட்டுப்பத்திரம் - 2

1. ‘ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை’ என்ற குறளடியின் தொனிப்பொருளுக்கேற்ற விதத்தில் சொற்பொழிவொன்றை எழுதுக.
2. ‘தீயொழுக்கம் என்றும் இடும்பைத் தரும்’ என்ற குறளடியின் பொருளுக்கேற்ற விதத்தில் ஒரு சிறுகதை எழுதுக.
3. ‘நல்லொழுக்கமுடையோர் மறந்தும் கூட தீய சொற்களைச் சொல்லார்’ எனும் தொனிப்பொருளில் உரையாடலொன்றை ஆக்குக.
4. ‘உயிரினும் மேலானது ஒழுக்கம்’ எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | |
|---|---|
| தேர்ச்சி: 2.0 | இலக்கியங்களைக் கற்பதன் மூலம் விருத்தி செய்த மொழியாற்றலை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் 2.3: | பாடப் பரப்பைக் கிரகித்து விடையளிப்பார். |
| செயற்பாடு: | 'மொழியின் அதியற்புத இயல்பு' எனும் கட்டுரையை வாசித்துத் துலங்குவோம். |
| நேரம்: | 120 நிமிடங்கள் |
| தர உள்ளீடு : | • பாடநூல் (மொழியின் அதியற்புத இயல்பு - கட்டுரை)<br>• உரைப்பகுதி - பின்னிணைப்பு 1<br>• செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு 2<br>• எழுதுதாள்கள் |

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 2.3.1

- பின்னிணைப்பு 1 இல் உள்ள உரைப்பகுதியைக் காட்சிப்படுத்தி பின்வரும் வினாக்களை வினவுங்கள்.
- இவ்வுரைப்பகுதியின் பிரதான கருத்து யாது?
- இவ்வுரைப்பகுதியின் துணைக் கருத்துக்கள் எவை?
- கட்டுரையாளர் தமது கருத்தை வலியுறுத்தக் கையாண்ட உத்திகள் யாவை?
- ஒரு கட்டுரையை வாசிக்கும்போது எவ்வெவ் விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டும்?

இவ்வினாக்களை வினவுவதன் மூலம் பின்வரும் விடயங்களை விளக்கி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • நோக்கம் |
| • வடிவம் |
| • உத்திகள் |
| • மையக்கருத்தும் துணைக்கருத்துகளும் |
| • மொழிநடை |
| • விழுமியம் / படிப்பினை |

(20 நிமி)

### படி 2.3.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- 'மொழியின் அதியற்புத இயல்பு' என்ற கட்டுரையை மௌனமாக வாசித்துக் கிரகித்துக்கொள்ள அறிவுறுத்துங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்தினை அனைவருக்கும் வழங்குங்கள்.
- ஏனையவர்களுடன் கலந்துரையாடி, செயற்பாட்டுப்பத்திரத்தைப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.

(60 நிமி)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**படி 2.3.3**

- மாணவர்களை வகுப்பு நிலைக்கு வரச்செய்யுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை அழைத்து விடைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- விடைகள் தொடர்பாக ஏனையவரின் கருத்துக்களையும் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - அணுகுண்டு, மின்சாரம், தானியங்கி, போக்குவரத்துச் சாதனங்கள், வேகமாகச் செல்லும் ஆகாய விமானங்கள், அச்சுயந்திரம் போன்றவற்றின் கண்டுபிடிப்பு.
> - மனிதனின் அதியற்புத செயல்களுள் உச்சமானது அவன் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டமையாகும்.
> - ஆரம்பத்தில் ஒலிக்குறிப்புகள்
>   தெளிவற்ற பேச்சுவழக்கு
>   பேச்சு
>   எழுத்து
>
> - பேச்சுக்கும் நாம் குறிப்பிடும் பொருளுக்கும் இடையே நேரடித் தொடர்பில்லை.
>   அதனால் தான் பேச்சை/ மொழியை குறியீடு என்று குறிப்பிட்டார்.
> - துணைக்கருத்துக்கள்:
> - மிருகங்களின் செயற்பாடுகள் தொடர்பான விடயம்
> - பறவைகளின் துலங்கல் தொடர்பான விடயம்
> - சிந்தனை: மனித சிந்தனை சொற்களால் ஆனது
>   சொற்களின்றி சிந்தித்தல் இயலாது

(40 நிமி)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- கட்டுரைகளை வாசித்து, அவற்றின் பிரதான கருத்துக்களை முன்வைப்பார்.
- கட்டுரையின் துணைக்கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- கட்டுரையாசிரியர் கையாண்டுள்ள உத்திகள் பற்றி எடுத்துரைப்பார்.
- கட்டுரையின் மொழிநடை தொடர்பாக கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
- பல்வேறு விடயங்கள் தொடர்பான கட்டுரைகளைத் தேடி வாசிப்பார்.

**பின்னிணைப்பு - 1**

## தமிழ்மொழி

மனிதர் ஒருவருக்கொருவர் தம் கருத்தை வெளியிட்டுக்கொள்ளும் கருவியே மொழி எனப்படும். உலகிலுள்ள எண்ணற்ற மொழிகளுள் காலத்தால் பழமை வாய்ந்த மொழிகள் சிலவே. அவற்றுள்ளும் இலக்கியச் செல்வம் மிகுந்துள்ள மொழிகள் மிகச்சிலவே. இத்தகைய சிறப்பு வாய்ந்த மொழிகளுள் தமிழும் ஒன்று.

'தமிழ்' என்னும் சொல்லுக்கு 'இனிமை' என்பது பொருள். தமிழ் மிகவும் இனிமையுடைய மொழி. திருந்திய இலக்கண அமைதி நிரம்பிய மொழி. ஆகவே இதனை உயர் தனிச் செம்மொழி என்பர்.

திராவிட மொழிகளுள் தமிழ் தலைமை வாய்ந்தது. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளும் திராவிட இனத்தைச் சேர்ந்தவைகள். இவை தமிழினின்று பிரிந்த மொழிகள். "கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்" என்று சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியதும் இக்கருத்தை விளக்குவதாகும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாரதியார் இதன் இனிமையைப் பாராட்டிக் கூறியுள்ளார்.

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப்பத்திரம்

1. இக்கட்டுரையில் மனிதனின் சாதனைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பட்டியற்படுத்துக.
2. இக்கட்டுரையின்படி மனிதனின் அதியற்புத செயல்களுள் முதன்மையானது எது?
3. மொழியின் வளர்ச்சிப்படிகள் பற்றிய ஆசிரியரின் கருத்து யாது?
4. 'மொழி ஒரு குறியீடு' எனக் குறிப்பிடப்படுவதற்கான காரணம் யாது?
5. பிரதான கருத்தை வலியுறுத்த ஆசிரியர் கூறியுள்ள துணைக்கருத்துக்கள் எவை?
6. மனித சிந்தனைக்கும் மொழிக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டுக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

தேர்ச்சி: 1.0 — இலக்கியங்களை நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 1.4: — விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

செயற்பாடு: — "களம்புகலோம்புமின்" என்ற புறநானூற்றுச் செய்யுளை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

நேரம்: — 120 நிமிடங்கள்

தர உள்ளீடு :
- பாடநூல் (களம்புகலோம்புமின் பாடல்)
- வாசிப்புப்பகுதி - பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு 2
- அகராதி
- எழுதுதாள்கள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.4.1**

பின்வரும் திருக்குறளைக் காட்சிப்படுத்துங்கள்.

"என் ஐ முன் நில்லன்மின் தெவ்வீர்! பலர் என் ஐ
முன்நின்று கல்நின் றவர்"

சொற்களை சரியாகக் கொண்டு கூட்டி, குறளின் பொருள் புலப்படுமாறு வாசித்துக் காட்டுக.

பின்வரும் வினாக்களை மாணவரிடம் வினவுங்கள்.
1. இக்குறளின் பொருள் யாது?
2. இக்குறள் மூலம் மறைமுகமாக உணர்த்தப்படும் விடயம் என்ன?
3. புலவரின் நோக்கம் யாது?
4. பண்டைய இலக்கியங்களை வாசிக்கும்போது நாம் அவதானிக்க வேண்டிய விடயங்கள் யாவை?

இதுபோன்ற வினாக்களை வினவுதல் மூலம் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| பண்டைய இலக்கியங்களின் பொருள் மரபு<br>பாடலின் உட்பொருள்<br>புலவர்களின் ஆற்றல்<br>அரசர் - புலவர் உறவு<br>இலக்கியங்கள் சமகால, சமூக, பொருளாதார, அரசியல் போக்குகளைப் பிரதிப்பலிப்பன. |

(20 நிமி)

**படி 1.4.2**

- மாணவர்களை குழுநிலையில் அமரச் செய்யுங்கள்.
- "புறநானூறு - அறிமுகம்" என்ற உரைப் பகுதியை அனைவருக்கும் வழங்குங்கள்.
- தேவைப்படுமிடத்து சங்ககாலம் பற்றியும் புறத்திணை பொருள் மரபு பற்றியும் விளக்கம் கொடுங்கள்.
- பின்னர், "களம்புக லோம்புமின்" என்னும் புறநானூற்றுச் செய்யுட் பகுதியினை அனைவருக்கும் வழங்கி செய்யுளினை வாசித்துப் பொருள் விளங்குவதற்கு வழிகாட்டுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் 1 இனை வழங்கி அறிவுறுத்தலின்படி செயற்படத் தூண்டுங்கள்.

(40 நிமி)

படி 1.4.3

- மாணவர்களை வகுப்பு நிலைக்கு வரச்சொல்லுங்கள்.
  எழுமாற்றாக மாணவர்களை அழைத்து விடைகளை முன்வைக்கச் செய்யுங்கள்.
  முன்வைத்த விடைகள் தொடர்பாக ஏனைய மாணவர்கள் கருத்துக்கள் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
  பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவருடன் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

| |
|---|
| • பாடலைப் பாடிய புலவர் ஔவையார்.<br>• அதியமான் நெடுமானஞ்சி என்ற மன்னனின் சிறப்பினைப் பாடுகின்றார்.<br>• மன்னனின் வீரம்<br>• அதாவது ஒரு நாளில் எட்டுத்தேர் செய்யவல்ல தச்சன் ஒரு மாதம் முயன்று செய்ததொரு தேர்க்காலினைப் போன்ற திண்மையும் விரைவும் கொண்டவன் என மன்னனின் வலிமை பாராட்டப்பட்டுள்ளது. இதற்காக உவமையினைக் கையாள்வது சிறப்பு.<br>உவமை - புலவர் மன்னனின் வலிமையினை எடுத்துக் கூறுவதற்கு தான் கண்டு அனுபவித்த விடயத்தினை உவமையாக்கியுள்ளார். அதாவது கற்பனையில் இல்லாத ஒன்றினைக் கூறாது அதியமான் நெடுமான் அஞ்சியின் வலிமையினை, தேரினைத் தாங்கும் தேர்க்காலின் வலிமைக்கு ஒப்பிடுவது பொருத்தமானதாக, நயத்திற்குரியதாக அமைந்துள்ளது.<br>• மன்னனிடத்தில் பேரன்பு உடையவர். நாட்டுநலனில் அக்கறையுடையவர். நாடுகளுக்கிடையில் போர் ஏற்படாமல் தடுப்பதற்குத் தமது புலமையைப் பயன்படுத்தி மன்னர் மனதை மாற்றியவர்.<br>• போரெதிர்ந்து களம்புகல் ஓம்பு மின் - என்ற தொடரில் புலவர், பகைவரை எச்சரிக்கை செய்யுமுகமாக அதியமானின் அரும்பகை தாங்கும் பேராற்றலை வலியுறுத்தி போரினைத் தடுக்க முயல்கின்றார்.<br>• நாட்டின் நலன் கருதி ஆட்சி செய்த மன்னரின் பேராற்றல், சிறப்பு, வீரம், கொடைத்தன்மை, போர்க்களக் காட்சி, நாட்டுவளம்.<br>• வைகல் - நாள்<br>திங்கள் - மாதம்<br>கால் - தேர்ச்சில்லு<br>• பாடலின் பொருள் சரியாக எழுதப்பட்டிருத்தல். |

(60 நிமி)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சங்ககால புலவர்களின் சிறப்புக்களை அறிந்து கூறுவார்.
- சங்ககாலத்தில் மன்னருக்கும் புலவருக்கும் இடையிலான உறவு நிலையினை விபரிப்பார்.
- புறநானூற்றுப் பாடல்களின் பொருள் மரபு பற்றி அறிந்து கூறுவார்.
- சங்ககாலப் பாடல்களை தேடி வாசித்து நயப்பார்.

**பின்னிணைப்பு - 1**

## புறநானூறு - அறிமுகம்

தமிழ் மொழியின் பெருமைகளை உலகுக்கு உணர்த்திய சங்க இலக்கியத் தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. புறநானூற்றுச் செய்யுள்களை நாம் கற்கும்போது அக்காலத்துப் படைத்திறம் வாய்ந்த பெருவேந்தரைக் காணலாம். கொடைத்திறம் வாய்ந்த வள்ளல் பெருமக்களைக் காணலாம். கற்றறிந்து அடங்கிய சான்றோரைக் காணலாம். இன்னும் பழந்தமிழ்க் குலங்களையும் குடிகளையும் கூட நாம் காணலாம்.

சான்றோர்கள் எனச் சிறப்பித்துக் கூறப்படும் சங்கப் புலவர்கள் மக்களிடத்தில் பேரன்பும், அரசரை அறநெறியிற் செலுத்தும் அருமுயற்சியும் அஞ்சாத நெஞ்சத்தோடு எவ்விடத்தும் உண்மையை எடுத்துக்கூறும் மனத்திண்மையுமுடையவர். தம்மைப் போற்றிய மன்னருக்கு உயிரையும் உவந்தளித்து தமிழ் நாட்டிலே ஒற்றுமையை நிலவச் செய்த பண்பாட்டாளர்கள். படைப்பாற்றலில் நிகரற்றவர்கள்.

தமக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான் உயிர் நீத்தபோது ஔவையார் நெஞ்சுருகிப் பாடியதும் பாரி இறந்தபோது உயிர்வாழ விரும்பாது கபிலர் வடக்கிருந்ததும், கோப்பெருஞ்சோழன் உயிர்துறக்க அதனைப் பொறுக்காது பிசிராந்தையர் தம்முயிர் துறந்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் அக்காலப் புலவருக்கும் அரசருக்கும் இருந்த நெருங்கிய உறவைக் காட்டுவனவாகும்.

---

**பின்னிணைப்பு - 2**

**செயற்பாட்டுப்பத்திரம் - 1**

குழுநிலையில் கலந்துரையாடி, தனித்தனியாக பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இப்புறநானூற்றுப் பாடலைப் பாடியவர் யார்?
2. அவர் எந்த மன்னனின் சிறப்பினைப் பற்றிப் பாடுகின்றார்?
3. அம்மன்னன் பற்றிச் சிறப்பாகக் கூறப்படும் விடயம் யாது?
4. அச்சிறப்பைப் புலவர் எடுத்துக்கூறும் வகை யாது?
5. அம்மன்னனுக்கும் புலவருக்கும் இடையே இருந்த உறவு பற்றி யாது கூறுவீர்?
6. 'போரெதிர்ந்து களம்புகல் ஓம்புமின்' என்று கூறும் புலவரின் நோக்கம் பற்றி யாது கூறுவீர்?
7. புறநானூற்றுப் பாடல்களின் பொருள் மரபுபற்றி நீர் யாது அறிவீர்?
8. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.
   வைகல், திங்கள், கால்.
9. "களம்புகல் ஓம்புமின்" என்ற பாடலின் பொருளை நீர் விளங்கிக் கொண்ட வகையில் எழுதுக.

# பகுதி - III

# கணிப்பீடும் மதிப்பீடும்

# அறிமுகம்

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக, வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர் களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற் பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரசினங்களை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்து கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall News Papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடனடிச் சொற்பொழிவு (Impromptu Speeches)
- பாத்திரம் ஏற்று நடித்தல் (Role Plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diaries)
- செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபாடு கொள்வதற்கும் வழிசமைத்துள்ளன.

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

# கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் இலக்கிய நயம் - தரம் 11

**கருவி : 01**

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : முதலாந் தவணை

2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 1.1 1.2 1.3 1.4

3. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
   - காளத்தி வேடனும் கங்கை வேடனும்
   - நோக்கியும் நோக்காததும் போல்
   - இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்

4. கருவியின் தன்மை : பட்டிமன்றத்தில் பங்கேற்றுப் பேசுதல்

5. கருவியின் நோக்கங்கள் :
   - கட்புல செவிப்புல சாதனங்களினூடாகவும் தம் பாடசாலை நிகழ்வாகவும் இடம்பெறும் பட்டிமன்றம், அரட்டை அரங்கு, விவாதம் போன்றவற்றை அவதானித்து கிரகிப்பர்.
   - பொருத்தமானவர்களுடன் கலந்துரையாடி, கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுவார்.
   - பட்டிமன்றத்தில் பங்கேற்று பொருத்தமாகக் கருத்துக்களை முன்வைத்து வலியுறுத்தும் ஆற்றலைப் பெறுவார்.

6. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

   ஆசிரியருக்கு:

   - இக்கருவியின் நோக்கம், நடைபெறும் தினம், நிகழ்த்தும் முறை என்பனபற்றி மாணவருக்கு அறிவியுங்கள்.
   - இரு வார காலம் அவகாசம் வழங்குங்கள்.
   - மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
   - தலைப்புகளை (கருவிக்குரிய பாடப்பகுதியில் வழங்கப்பட்டபடி) வழங்குங்கள்.
   - ஒவ்வொரு குழுவிலிருந்தும் மூவர் மூவராகப் பங்கேற்பதற்கு வழிகாட்டுங்கள்.
   - தாம் கூறவந்த விடயத்தில் வெற்றிகண்டவர் ஜே.எம்.எம்.அப்துல் காதர் / ரா.பி.சேதுப்பிள்ளை / பண்டிதமணி சி.கணபதி பிள்ளை என்ற தலைப்புக்களில் கருத்துக்களைக் கூறவேண்டும் என வலியுறுத்துங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ஆசிரியர் கூறவந்த விடயம், மொழிநடை, அவர் கையாண்ட உத்தி, எடுத்துகாட்டுகள், முடிவு, வாசகரை ஈர்க்கும் தன்மை போன்ற விடயங்களில் கருத்துகளை முன்வையுங்கள்.
- அவ்வப்போது பங்கேற்பவர்களை அழைத்து ஆலோசனை வழங்குங்கள்.
- நடுவர் குழுவினரின் உதவியுடன் போட்டி நிகழ்ச்சியாகக் குறிப்பிட்ட தினத்தில் நடத்துங்கள்.

மாணவருக்கு:

- வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களினூடாகவும் பாடசாலை இலக்கிய மன்றங்களின் நிகழ்வுகளுடாகவும் பட்டிமன்ற நிகழ்ச்சிகளை அவதானியுங்கள்.
- உங்கள் பாடத்தினையும் மற்றைய பாடங்களையும் நன்றாக வாசித்து குழுவாகக் கலந்துரையாடுங்கள்.
- ஆசிரியர்களது ஆலோசனைகளையும் இலக்கிய ஆர்வலர்களையும் துணையாகக் கொண்டு உங்கள் கருத்துகளுக்கு வலுவூட்டுங்கள்.
- பொருத்தமான மொழிச் செம்மையுடன் பேசுவதற்குப் பழகிக் கொள்ளுங்கள்.
- உங்கள் கட்டுரை ஆசிரியர் சார்பாகக் கருத்துக்களை வலியுறுத்துவதற்கு ஏற்ற நுட்பங்களை மனதிற்கொள்ளுங்கள்.
- குழு ஒற்றுமையினை மனங்கொள்ளுங்கள்.
- பட்டி மன்றத்தில் பங்கேற்றலுக்கான பாணியினைப் பின்பற்றுங்கள்.

மதிப்பீட்டு நியதிகள்:

- பட்டிமன்றத்தில் பேசும் ஆற்றலைப் பெறுவார்.
- தத்தம் தலைப்புக்கேற்ப கருத்துக்களைப் பொருத்தமாக முன்வைப்பார்.
- செம்மையான மொழியினைப் பிரயோகிப்பார்.
- குழு ஒற்றமையினைப் பேணுவார்.
- நடுவரின் கருத்துக்களையும் ஏற்று பொருத்தமாகப் பேசுவார்.
- மற்றயவரது கருத்துக்களையும் கிரகித்து பொருத்தமாக தம் கருத்துக்களைக் கூறும் திறனைப் பெறுவார்.

# கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை
# மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்
# இலக்கிய நயம் - தரம் 11

**கருவி : 02**

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : இரண்டாந் தவணை

2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 1.1 1.4 2.1 3.2

3. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
   - சிறுகதை இலக்கியங்கள்
   - நாவல் இலக்கியங்கள்
   - காவியங்கள்
   - அனுபவங்களும் சம்பவங்களும்

4. கருவியின் தன்மை : நாடகப் பிரதியாக்கம் செய்து நடித்தல்.

5. கருவியின் நோக்கங்கள் :
   - இலக்கியங்கள் கூறுகின்ற கதைகளை வாசிப்பார்.
   - கதையின் தொனிப்பொருள், கதாபாத்திரங்கள், கதைக்களம் போன்றவற்றைக் கிரகித்து வெளிப்படுத்துவார்.
   - இலக்கியத் தரம் வாய்ந்த நாடகப் பிரதியினை எழுதுவார்.
   - இலக்கிய மன்றத்தில் நாடகங்களை (போட்டியுடன்) நடிப்பார்.

6. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

   ஆசிரியருக்கு:
   - இக்கருவியின் நோக்கம், நடைபெறும் தினம், நிகழ்த்தும் முறை, செயற்படும் முறை பற்றி ஒரு மாதத்துக்கு முன்பே மாணவருக்குத் தெரியப்படுத்துங்கள்.
   - மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்படுத்துவதற்கு வழிகாட்டுங்கள்.
   - நாடகத்துக்கான கதைக்கருக்களை மாணவர்கள் சேகரிப்பதற்கான அறிவுரைகளை வழங்குங்கள்.
   - அவ்வப்போது மாணவர்களால் சேகரிக்கப்பட்டவற்றைப் பார்வையிட்டு, ஆலோசனை வழங்குங்கள்.
   - குறிப்பிட்ட தினத்தில் நாடகப்பிரதியினைச் சமர்ப்பிப்பதற்கு ஆவன செய்யுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பயிற்சியில் ஈடுபடும்போது ஏனைய ஆசிரியர்களின் உதவியுடன் நாடகங்களில் திருத்தங்களை மேற்கொண்டு மெருகூட்டுங்கள்.
- போட்டி நிகழ்ச்சியாக அந்நாடகங்களை மேடையேற்றி மாணவர்களை ஊக்குவியுங்கள்.

மாணவருக்கு:

- பல்வேறு இலக்கியங்களை வாசியுங்கள். (சிறுகதைகள், நாவல்கள் போன்றன.)
- பல்வேறு அனுபவங்களையும், சம்பவங்களையும் பற்றிக் குழுவாகக் கலந்துரையாடுங்கள்.
- நாடகத்துக்கான கதைக்கருவினைத் தெரிவுசெய்யுங்கள்.
- கதைக்கரு தொடர்பாக ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.
- கதைக்கருவினை மையமாகக் கொண்டு நாடகப் பிரதியாக்கம் ஒன்றை ஆக்குங்கள். தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் ஆலோசனையைப் பெறுங்கள்.
- குறிப்பிட்ட தினத்தில் நாடகப்பிரதியினைக் கையளியுங்கள்.
- ஆசிரியரின் உதவியுடன் நாடகத்தை நடித்துப் பயிற்சி பெறுங்கள்.
- குறிப்பிட்ட தினத்தில் நாடகத்தை மேடையேற்றுங்கள்.

மதிப்பீட்டு நியதிகள்:

- நாடகக் கதைக்கருக்களை இனங்கண்டு பொருத்தமாக எழுதுவார்.
- கதாபாத்திரங்களுக்கேற்ற பொருத்தமான மொழிநடையினைக் கையாள்வார்.
- பார்வையாளர்களைக் கவரும் நுட்பங்களைப் பேணுவார். (மேடை அமைப்பு, ஒலி, ஒளி, பின்னணிக் குரல், இசை, வாத்தியம்)
- பாத்திரங்களின் குணச் சித்திரங்கள் புலப்படும் வகையிலான ஒப்பனைகளைப் பேணுவார்.
- மேடைக் கூச்சமின்றி ஈடுபாட்டுடன் நடிப்பார்.
- குழு ஒற்றுமையினைப் பேணுவார்.

# கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை
# மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்
# இலக்கிய நயம் - தரம் 11

**கருவி : 03**

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : மூன்றாந் தவணை

2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 1.2 3.0

3. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
   - கிராமிய இலக்கியங்கள் / நாட்டார் பாடல்கள்
   - சினிமாப் பாடல்கள்

4. கருவியின் தன்மை : நாட்டார் பாடல்களைத் தேடிச் சேகரித்து வகைப்படுத்தி குழுக்களாக இசையுடன் பாடுதல்.

5. கருவியின் நோக்கங்கள் :
   - நாட்டார் பாடல்கள் பலவற்றை வாசிப்பார்.
   - பொருத்தமானவற்றைச் சேகரிப்பார்.
   - சினிமாப் பாடல்களுள் நாட்டார் பாடல்களை இனங்கண்டு சேகரிப்பார்.
   - மனனம் செய்வார்.
   - பொருள் புலப்பட இசையுடன் பாடுவார்.

6. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

   ஆசிரியருக்கு:

   - இக்கணிப்பீட்டுக் கருவியின் நோக்கம், நடைபெறப்போகும் திகதி என்பவை பற்றி மாணவருக்குத் தெரியப்படுத்துங்கள்.
   - மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
   - ஒவ்வொரு குழுவுக்கும் நாட்டார் பாடல்களில் பின்வருவன போன்ற தலைப்புக்களை வழங்குங்கள்.
     - காதற் பாடல்கள் - தொழிற்பாடல்கள் - நகைச்சுவைப் பாடல்கள் - தாலாட்டுப் பாடல்கள் - ஒப்பாரிப்பாடல்கள் - விளையாட்டுப் பாடல்கள்
   - ஒவ்வொரு வகையிலும் ஐந்துக்கு குறையாத பாடல்களைச் சேகரிக்கச் செய்யுங்கள்.
   - ஒருமாத கால அவகாசம் வழங்குங்கள்.
   - மாணவர்களால் சேகரிக்கப்பட்ட பாடல்களின் பொருத்தப்பாடு பற்றி அவ்வப்போது மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- சங்கீத ஆசிரியர் மற்றும் தேர்ச்சி பெற்றவர்களிடம் உதவி பெற்று இசையுடன் பாடுவதற்கு ஆலோசனை வழங்குங்கள்.
- சேகரிக்கப்பட்ட பாடல்களுள் பொருத்தமான பொருட் சிறப்புள்ள இரண்டு பாடல்களைக் குறிப்பிட்ட தினத்தில் முன்வைப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- குறிப்பிட்ட ஒரு தினத்தில் நடுவர்களின் உதவியுடன் போட்டி நிகழ்ச்சியாக நடத்துங்கள்.

மாணவருக்கு:

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தலைப்புகளுக்குப் பொருத்தமான ஐந்துக்கு குறையாத நாட்டார் பாடல்களை சேகரியுங்கள்.
- ஆசிரியர்களது ஆலோசனைப்படி பொருத்தமான இரு பாடல்களைத் தெரிவுசெய்யுங்கள்.
- குழு ஒற்றுமையுடன் செயற்படுங்கள்.
- மனனம் செய்யுங்கள்.
- சங்கீத ஆசிரியர் அல்லது உங்கள் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற ஒருவரின் உதவியுடன் இசையுடன் பாடுங்கள்.
- மேலும் மெருகூட்டுவதற்காக இலகுவான இசைக்கருவிகளையும் பயன்படுத்தும் பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- குறிப்பிட்ட தினத்தில் நீங்கள் பாடப்போகும் பாடற் பிரதிகளை தயார்நிலையில் வைத்துக்கொள்ளுங்கள்.
- இசையுடன் பாடுங்கள்.

மதிப்பீட்டு நியதிகள்:

- தலைப்புக்குப் பொருத்தமான பாடல்களைச் சேகரிப்பார்.
- எல்லா வகையான பாடல்கள் பற்றியும் அறிந்து எழுதுவார்.
- தேடிய பாடல்களை மனனம் செய்து பாடுவார்.
- பொருத்தமான இசையினை அறிந்து பேணுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.